வேண்டும்படியிருக்கிற தன்னுடைய அழகிய திருக்கைகளாலே. (தான் தடவ) திருவடிகளை வருடப்பெறில் உளளாய் இல்லையாகில் இல்லையாம்படியான ஆற்றாமையுடையளாய்க் கொண்டு தடவ. ஆக- கடலானது கவரிவீச, ஸ்ரீபூமிப்பிராட்டி திருவடிகளை வருடவாயிற்று கண்வளர்ந்தருளுவது.

(தான்கிடந்து) ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனாய் ஒன்றுமொருகாலுஷ்யமுமின்றிக்கே யிருக்கக்கடவ அவன் இவளுடைய ஸ்பர்சத்தால் வந்த ஸுகத்தாலே இரண்டுமறியாதே கிடந்து உறங்காநிற்கும்.

(ஒருன்னியயோகத் துறக்கம் தலைக்கொண்டபின்னை) அல்லாதார்க்குமுன்பேதானே நெஞ்சு இருண்டிருக்குமிறே; அதுக்குமேலே கண்ணைச் செம்புளித்தவாறே புறம்புப்ரகாசிக்கிற விதுவும் போய் இருளுமிறே. இவனுக்கு அங்ஙனமொன்றின்றியே திருக்கண்களைச் செம்புளித்தால் அகவாயில் ப்ரகாசிக்குமதுக்கு வர்த்தகமாயிருக்கும். உன்னுகை- அநுஸந்திக்கை. (யோகத்துறக்கம்) ரஜஸ்தமஸ்ஸுக்களாலே அபிபூதனாயுறங்குகிறானன்று; (க) * உறங்குவான்போல் யோகநித்ரையிறே. "அவை நல்வழியாகக் கரைசேரும் வகையேதோ?" என்று ஜகத்ரக்ஷணசிந்தை பண்ணிக்கொண்டாயிற்று கண் வளர்ந்தருளுவது. (தலைக்கொண்டபின்னை) காலப்பூவலர்ந்தாற்போலே. உணர்ந்தவநந்தரம் ஸ்ருஷ்டித்தல்லது நிற்கவொண்ணாதபடியானவற்றைச் சொல்லுகிறது.

(தன்னுபிவலயத்து) "பூவலயம்" என்னுமாபோலே திருநாபிவலயமென்று - அதினுடைய பெருமையைச் சொன்னபடி. (பேரொளிசேர் மன்னியதாமரை மாமலர்பூத்து) கார்யரூபமான ஜகத்

(க) திருவாய்-ரு-ச-கக-

மூ.— அம் மலர்மேல்
முன்னம் திசைமுகனைத் தான்படைக்க, மற்றவனும்
முன்னம் படைத்தனன் நான் மறைகள்,—

அந்.—அம்மலர்மேல், முன்னம், திசைமுகனை, தான், படைக்க, (ஓ) மற்று, அவனும், முன்னம், நால்மறைகள், படைத்தனன், (௧௦)

அர்.—அத்தாமரைப்பூவில், ஆதியில், சதுர்முகனைத், தானே, ஸ்ருஷ்டிக்க, (ஓ) அதற்குமேல், அந்த ப்ரஹ்மாவும், முதலில், நாலு வேதங்களையும், ஸ்ருஷ்டித்தான் (பெற்றான்). (௧௦)

தும் இதுக்குப் போராதென்னும்படியான விலக்ஷணமான ஒளியையுடைய. கார்யம் ப்ரவ்ருத்தமாகாநின்றாலும் காரணம்நசியாதே நித்யமாய் ஜகத்காரணமான தாமரைப்பூவையுண்டாக்கி. அன்றியே, மிக்க வொளிசேர்ந்திருக்கிறதாய் அதுதான் நித்யமாயிருந்துள்ள தாமரையென்றுமாம்.

(அம்மலர்மேல் முன்னம் திசைமுகனைத் தான் படைக்க) அச்செவ்விப்பூவிலே நாலுபூத்தோன்றினாற்போலே ஸ்ருஷ்டிகாலத்திலே சதுர்முகனைத் தானுண்டாக்க. (மற்றவனும்) இவன் ஸ்ருஷ்டித்தவநந்தரம் "இவனோ ஈஶ்வரன்" என்று மசக்குப்பரலிடலாம்படி பெருத்த அந்தச் சதுர்முகனும். (முன்னம்படைத்தனன் நான்மறைகள்) அந்தச்சதுர்முகனும் முன்புண்டாக்கின நான் மறைகளென்றாற்போலேயிருக்கிறது. ஸர்வேஶ்வரன் இவ்வேதாக்ஷரராசியை, ஸுப்தப்ரபுத்தந்யாயத்தாலே முன்புத்தை ஆநுபூர்வியை ஸ்மரித்துச்சொல்லுமென்று வேதத்தினுடைய அபௌருஷேயத்வம் சொல்லாநிற்க. "இவன் ஸ்ருஷ்டித்தான்" என்னில் ப்ரமாண விருத்தமாமிறே; இனித்தானே (௧) "యో బ్రహ్మాణం విదధాతి పూర్వం యో వై వేదాంశ్చ ప్రహిణోతి తస్మై- யோப்ரஹ்மாணம் விததாதிபூர்வம் யோவை வேதாம்ஶ்சப்ரஹிணோதிதஸ்மை" என்றுசொல்லுகிறவற்றோடும் விரோதிக்குமிறே; ஆனால் பின்னை என் சொல்லிற்றாகிறதென்னில் "இன்னான் தன் பிதாவின்பக்கல் படைத்த த்ரவ்யம் இன்னதனை" என்னுமாபோலே அந்தப்ரஹ்மாவும் ஸர்வேஶ்வரன்பக்கல் அதிகரி

அரு.—"பேரொளிசேர்மன்னிய"-ஒளியுஞ்சேர்ந்து நித்யமுமாயிருக்கிறதாமரையென்னுதல், ஒளிசேருகைதான் நித்யமாயிருக்கிற தாமரையென்னுதல். "படைத்தனன்"-பெற்றானென்றபடி. பெற்றத்தைப் படைத்தா

(௧) ஶ்வேதாஶ்வதரம் - ௬.

மூ.— அம் மறைதான
மன்னுமறம் பொருளின்பம் வீடென் றுலகில்,
நன்னெறி மேம்பட்டனநான் கன்றே,—நான்கினிலும்
பின்னையது பின்னைப்பெயர் தருமென்பது,

அந்.—அம்மறைதான், மன்னும், அறம், பொருள், இன்பம், (௫) வீடு, என்று, உலகில், நல்நெறி, மேம்பட்டன, (௧௦) நான்கன்றே, நான்கினிலும், பின்னையது, பின்னை, பெயர்தரும், (௧௫) என்பது,

அர்.—அவ்வேதங்கள்தான் (சொல்லுகிற புருஷார்த்தங்கள்), நிலைநின்ற, தர்மம், அர்த்தம், காமம், (௫) மோக்ஷம், என்று, லோகத்தில், நல்வழியாலே, ஶ்லாக்யமானவை, (௧௦) நாலுவகைகளன்றோ? (அந்) நாலிலும், கடையிலுள்ள மோக்ஷம், சரீராவஸாநாநந்தரம், புருஷார்த்தத்தைக் கொடுக்கும், (௧௫) என்று சொல்லப்படும்.

த்த நாலுவேதங்களுமென்றபடி.. பிறந்து படைத்தானென்னக் கடவதிறே பெற்றத்தை.

(அம்மறைதான்) அந்த வேதங்கள்தான். (மன்னுமறம் பொருளின்பம் வீடென்றுலகில் நல்நெறிமேம்பட்டன நான்கன்றே) தர்மார்த்தகாமமோக்ஷங்களென்று லோகத்திலே நன்றானவழியாலே மேற்பட்ட நாலுபுருஷார்த்தத்தோடே யடங்கப்பெறுமன்றோ. முந்துறமுன்னம், அறமென்கிறது - தர்மத்தை. மன்னுமறமென்கிறது - ஸாத்யரூபத்தாலும் ஸாதநரூபத்தாலுமாகக்கொண்டு நிற்பதொரு நிலையுண்டிறே. பொருளென்கிறது-அர்த்தபுருஷார்த்தத்தை, இன்பமென்கிறது - தாயாதரித்திருக்கிற காமபுருஷார்த்தத்தை. வீடென்கிறது-நாலாவதாகச் சொல்லுகிறமோக்ஷபுருஷார்த்தத்தை.

(நான்கினிலும்) இவை நாலிலும். (பின்னையதுபின்னை) பின்னையதாண்டு- பிற்படச்சொல்லுகிற மோக்ஷம், (அது பின்னையது பின்னை) அது பின்னை பின்னை என்றே போமித்தனை. இச்சரீரத்துடனே பெற்றறிவாரில்லை. அத்தைக்காற்கடைக் கொள்ளுகையாலும் சொல்லுகிற வார்த்தையிறே. ஆசைப்பட்ட இச்சரீரத்தைவிட்டு வேறொருசரீரத்தைப் பரிக்ரஹித்து, ஒருதேசவிசேஷத்திலே போய் காலாந்தரே அநுபவிக்குமது ஒரு அநுபவமாயற்றதோ? அதொன்றல்லவிறே. அதுதான் அவ்வசநங்கள் சொல்லக்கேட்குமித்தனை, கண்டுவந்தாரொருவருமில்லை. (பெயர்தருமென்பது) பெற்

அநு.—னென்னக்கூடுமோவென்ன; (பிறந்துபடைத்தான்) இத்யாதி. (பின்னையது) சாஸ்த்ரஸித்தமான மோக்ஷத்தைப் பின்னையென்றோபிக்ரலாமோவென்ன (அத்தைக்காற்கடை) இத்யாதி.

மூ.—

ஓர்
தொன் னெறியை வேண்டுவார் வீழ்கனியு மூழிலையும்,
என்னுமிவையே

அ்ந்.—ஓர், தொல்நெறியை, வேண்டுவார், வீழ், கனியும், (உ) ஊழ், இலையும், என்னும் இவையே,

அர்.—ச்லாக்யமாய், அநாதியான புருஷார்த்தத்தை, அபேக்ஷித்தவர்கள், (கீழே) விழுந்த, பழங்களும், (உ) பழைய (சருகான), இலைகளும், என்கிற இவைகளையே,

---

றியைத்தரும்; இஸ்ஸரீரத்தைவிட்டு வேறொரு சரீரத்தைப்பெற்று அநுபவிக்கவேண்டியதாயிருக்கும். இஸ்ஸரீரத்தைவிட்டு வேறொரு சரீரத்தைப்பெற்றுஅநுபவிக்கையாவது-ஒருவன்தபஸ்ஸுபண்ணி, அந்த தபஃபலம் வேறொருவன் புஜிக்குமாத்ரமன்றோ? அன்றியே, பின்னைப்பெயர்தருமென்றாய் - அதுக்கும்பொருளதுவே.

(ஓர்தொல்நெறியை வேண்டுவார்) ஸம்ஸாரத்தை யொழித்து நிரதிசயஸுகமான §(மோக்ஷத்தைவேண்டுவார். இப்படி சொல்லப்படாநின்றுள்ள பழையதான) மோக்ஷத்தைப் பெறவேண்டியிருப்பார். அத்தேசம் ப்ராப்யமானால் அங்குத்தைக்குப்போம் வழியும் ப்ராப்யாந்தர்க்கதமாகக்கடவதிறே. (வேண்டுவார்) அத்தையு மொன்றாக நினைத்து அபேக்ஷிப்பாரென்று தமக்கறிவுண்டான அநாதரத்தைச் சொல்லுகிறார்.

இனி இப்புருஷார்த்தத்தை யநுஷ்டிக்கும் ஸாதநத்தினுடைய பொல்லாங்கை யுபபாதிக்கிறார் மேல். (வீழ்கனியும்) தானே விழுந்து பசையற்றகனியும். (ஊழிலையும்) முளையிலேவிழுந்த இலையும், முற்றிப்பழுத்துச் சருகான இலையும். (என்னுமிவையே

அரு.—"பின்னைப் பெயர்தரும்" பின்னைப்பின்னை யென்கிற பெற்றியைத் தருமென்னுதல்; பின்னை - சரீராந்தரத்தில், பெற்றியை - சரீராந்தரத்தைத் தருமென்னுதல். முந்தினவர்த்தத்திலே சப்த நிர்வாஹங் காட்டுகிறார் (அன்றியே பின்னை) இத்யாதி. பொருளதுவே என்றது - கீழ்ச்சொன்னதுவேயென்றபடி. நெறியென்று - வழியைக் காட்டாநிற்க மோக்ஷமென்பானென்னென்ன அருளிச்செய்கிறார் (அத்தேசம்) இத்யாதி. வழியோடு தேசத்தோடு பேதமில்லை, எல்லாம் ப்ராப்யமென்றபடி. "ஊழிலை" முளையிலே முற்றப்பழுத்து விழுந்து நெடுநாள் சருகான இலை.

---

§ குண்டலிதம் க்வாசித்கம்

மூ — நுகர்ந் துடலம்தாம் வருந்தித்,
துன்னுமிலைக் குரம்பைத் துஞ்சியும்,—வெஞ்சுடரோன்
மன்னு மழல்நுகர்ந்தும்

அந்.—நுகர்ந்து, தாம், உடலம், வருந்தி, துன்னும், (௯) இலைக்குரம்பை, துஞ்சியும், வெம்சுடரோன், மன்னும், அழல், (௪௦) நுகர்ந்தும்,

அர்.—பக்ஷித்து, தாங்களே, மெய், வருந்தி, நெருங்கிய, (௯) இலைகளினால் செய்யப்பட்ட குடிசையில், உறங்கியும், உஷ்ணகிரணனை ஸூர்யனுடைய, பொருந்திய, வெய்யிலை, (௪௦) புஜித்தும்,

---

நுகர்ந்துடலம் தாம் வருந்தி) அதாவது-சருகிலைதின்றும் காயுங்கிழங்கும் தின்றுமிறே தபஸ்ஸு அநுஷ்ட்டிப்பது. அவதாரணத்தாலே ஒருவ்ரதஸமாப்திபிறந்து பின்னையொரு வ்ரதாரம்பத்தின்முன்னேயாகிலும் ஏகவாரம் அந்நம் புஜித்ததுமில்லையென்று தோற்றுகிறது. இத்தால், அநவரதகாயக்லேசம் சொல்லுகிறது. (நுகர்ந்து) அந்த ஸாதநத்தில் பண்ணின ஆதரம் தோற்ற போக்யதை யுண்டானதுபோலேயிருக்க புஜிக்கை. (உடலம் தாம் வருந்தி) அபிமத விஷயத்தைக்கண்டு இங்கே யநுபவிக்கலாயிருக்கிற சரீரத்தை க்லேசிப்பித்து. (தாம் வருந்தி) இவனுடைய கர்மங் கொண்டுபோய் க்லேசிப்பித்தல், தைவம் கொண்டுபோய் க்லேசிப்பித்தல் செய்யுமதொழியத்தாமே க்லேசிப்பித்து. (துன்னுமிலைக் குரம்பைத்துஞ்சியும்) இலையாலே நெருங்கச்செய்த பர்ணசாலைகளிலே கிடந்தும், அதில் நின்று முதிர்ந்த புழுதியானது கண்ணிலேபுக்கு நோவுபடும்படியாகத் துஞ்சியும். நித்ரை மரணத்தோடு பர்யாயமாகையாலே துஞ்சியு மென்கிறது

(வெஞ்சுடரோன் மன்னுமழல் நுகர்ந்தும்) உஷ்ணகிரணனை ஆதித்யனுடைய வெய்யிலை பக்ஷித்தும். மன்னுமழல் நுகர்ந்தென்கிறது - உள்ளுருப்புக்காலும் அழல்மாறுதேயிருக்கையும், இதுவே தண்ணீருமாக நுகருகைகயும். காற்றை பக்ஷித்தும் வெய்யிலை பக்ஷித்துமிறே சரீரத்தை ரக்ஷிப்பது. (வண்தடத்தி னுட்கிடந்தும்) அழ

அரு.—அபிமத விஷயம் - தம்முடைய அபிமத விஷயம். மன்னுமழலென்று விசேஷிப்பானென்னென்ன (மன்னுமழல்) இத்யாதி.

௪௨.— வண்தடத்தி னுட்கிடந்தும்,
இன்னதோர் தன்மையரா யீங்குடலம்விட்டெழுந்து, ௧௪
தொன்னெறிக்கட் சென்றாரெனப்படும்சொல்லல்லால்;
இன்னதோர் காலத்தினையாரிது பெற்றார், ௧௫
என்னவுங் கேட்டறிவ தில்லை,—

அந்.—வண், தடத்தின்உள், கிடந்தும், இன்னதோர், தன்மையராய், (௫) ஈங்கு, உடலம்விட்டு, எழுந்து, தொல், நெறிக்கண், (௧௦) சென்றார், எனப்படும், சொல் அல்லால், இன்னது, ஓர்காலத்து, (௧௫) இனையார், இது, பெற்றார், என்னவும், கேட்டு அறிவதில்லை. (௨௦)

அர்.—அழகிய, குளங்களினுள்ளே, மூழ்கியிருந்தும், இப்படிப்பட்ட, ஸ்வபாவத்தையுடையராய்க் கொண்டு, (௫) இந்த லோகத்தில், சரீரத்தைத்யஜித்துப், போய், நித்யமான, புருஷார்த்தத்தை, (௧௦) அடைந்தார்கள், என்கிற, சொல்லைத்தவிர, இப்படிப்பட்ட, ஒரு காலத்தில், (௧௫) இப்படிப்பட்டவர், இதை, லபித்தார், என்று சொல்லவும், கேட்டறிவதில்லை (இக்காலத்திலின்னார் போனாரென்று பார்த்துச் சொன்னவர்களில்லை). (௨௦)

கியதாக ஜலக்ரீடைபண்ணிப் போதுபோக்கலான தடாகங்களிலே சீதகாலத்திலே புக்கு நீர்க்காக்கைபோலே முழுகிப் பாசியேறக்கிடந்தும். (இன்னதோர் தன்மையராய்) தபஃபலம்பெற்று அதிலே வ்யுத்பத்திபண்ணினாலும் அதுக்காளாகாதபடி துக்கமே ஸ்வபாவமானபடி. (ஈங்குடலம் விட்டெழுந்து) நினைத்தபடி யநுபவிக்கலான இங்கே தானுகவபிமானித்து நெடுநாள் முகம் பழகின சரீரத்தைவிட்டெழுந்துபோய்.

(தொல்நெறிக்கட்சென்றாரெனப்படும் சொல்லல்லால்) மோக்ஷத்தேறப் போனார்களென்கிற உக்தியல்லது. (இன்னதோர்காலத்து) ஏதேனுமொருகாலத்திலே. (இனையாரிது பெற்றாரென்னவும் கேட்டறிவதில்லை) ஆரேனுமொருவர் இப்புருஷார்த்தத்தைப் பெற்றாரென்று கேட்டறிவதில்லை ; ப்ரமாணங்கள் சொல்லக்கேட்குமத்தனை. (க) "శుకో ముక్తో వామదేవో ముక్తః- சுகோமுக்தோவாமதேவோமுக்தஃ" என்று வசநங்களைப் படிக்குமத்தனை யல்லது கண்டு போந்தாருண்டாகச் சொல்லுவாரில்லை, இன்னார்பெற்றாரென்று சொல்

மூ.— உள தென்னில்
மன்னுங் கடுங்கதிரோன் மண்டலத்தின் நன்னடுவுள், ௧௬
அன்னதோ ரில்லியினூடு போய்,—வீடென்னும்,
தொன்னெறிக்கட் சென்றாரைச் சொல்லுமின்கள்

அந்.—உளதென்னில், மன்னும், கடும், கதிரோன், நல்மண்டலத்தின் நடுவுள், (கு) அன்னது, ஓர், இல்லியின், ஊடுபோய், வீடு என்னும் (௧௦) தொல், நெறிக்கண், சென்றாரை, சொல்லுமின்கள்,

அர்.—உண்டென்று சொல்லில், நிபிடமாய், தீக்ஷ்ணமாயிருக்கிற, கிரணங்களையுடைய ஸூர்யனுடைய, விலக்ஷணமான மண்டலத்தினுடைய மத்தியில், (கு) அப்படிப்பட்ட, ஒரு, சிறுவழியின், நடுவே சென்று, மோக்ஷமென்று சொல்லப்படுகிற, (௧௦) அநாதியான, ப்ராப்யதேசத்தை, அடைந்தவர்களை, (இன்னாரென்று) சொல்லுங்கள் (அத்தேசத்தைப் பார்த்துவந்தவர்களுண்டாகில் சொல்லுங்கோள்).

லக்கேட்டறிவதில்லை. சுகவாமதேவாதிகள் முக்தரென்றுசொல்லாநின்றதே, கேட்டறியத் தட்டென்னென்னில்; நான்போனேன், இன்னபடி யநுபவித்தேன்" என்று அங்குத்தையவர்படியைக் கண்டுவந்தார் சொல்லக்கேட்டறிவதில்லை.

(உளதென்னில்) முதலிலே யங்ஙனிருப்பதொரு புருஷார்த்தமில்லை. *அஸ்நாஸிகஞ்சித்—அக்கிநாஸிஞ்சேத்போலே அது உண்டாக வேணுமாகில் அது இருக்கிறபடி கேட்கலாகாதோ ?(மன்னும் கடுங் கதிரோன் மண்டலத்தின்நல்நடுவுள்) நித்யமாய் அணையவொண்ணாதபடி கொடிதானகிரணங்களையுடைய ஸூர்யமண்டலத்துள்ளிட்டுப் போகவேணுமாம். அவன் நூறாயிரம் யோஜனைக் கவ்வருகே ஸஞ்சரிக்க இங்கே அவன் வெய்யில் பொறுக்கமாட்டாத இவன், அவனை யணையப்போகையுமன்றியே அவனுடைய உள்ளேபோகவேணுமாம்.

(அன்னதோரில்லியினூடுபோய்) அவன்றான் அப்படிப் போமிடத்து ஒருபெருவழி பண்ணிப் போகையுமன்றியே அப்படிப்பட்டதோர் இல்லியினுள்ளிட்டாம் போவது. (வீடென்னும் தொன்னெறிக்கட் சென்றாரைச் சொல்லுமின்கள்) இவன்றான் ராஜகுலம்

மூ.— சொல்லாதே, கள
அன்னதே பேசுமறிவில் சிறுமனத்து, ஆங்
கன்னவரைக்கற்பிப்போம்யாமே,—

அந்.—சொல்லாதே, அன்னதே பேசும், ஆங்கு, அறிவுஇல், சிறுமன த்து, (ரு) அன்னவரை, யாமே, கற்பிப்போம்,

அர்.—(இக்கேள்விக்குச் சரியானஉத்தரம்) சொல்லாதே, முன்சொன்ன அத்தையே (வேதத்தில் சொல்லியிருக்கிறதென்பதையே) சொல்லுகிற, அவ்விஷயத்தில், அறிவில்லாத, (அறிவுக்கிடம்போராமல்) குறுகின ஹ்ருதயத்தையுடைய, (ரு) அப்படிப்பட்டவர்களுக்கு, நாமே, தெரியச்சொல்லுவோம்,

---

தோற்றப்போகக்கடவனும்; அவனிவனுடைய சரீர விஶ்லேஷத்தளவும் அவஸரம்பார்த்து நின்று முகம் காட்டக்கடவனும்; (க) "హార్దానుగృహీతః-ஹார்தாநுக்ருஹீத:" என்கிறபடியே; ஆதிவாஹிகர் கையிலேகாட்டிக்கொடுக்குமாம். தான் முன்னே கைவிளக்குப் பிடித்துக்கொண்டுபோமாம். இப்படி அந்த மோக்ஷமாகிற பழையதாயிருக்கிற தேசத்திலே "நான் போனேன், இன்னது கண்டேன், இன்னது அநுபவித்தேன்" என்று வந்தாரொருவரைக்காட்டிச் சொல்லிக் காணுங்கோள். இப்படி யங்குப் போய்வந்தானொருவன் சொல்லுமாகில் அதுவுமொன்றாகக்கடவது. (சொல்லாதே) இப்படி தான் ப்ரமாணஶ்ரேஷ்ட்டமான ப்ரத்யக்ஷாநுமாநாதிகளாலே இத்தை ஸாதிக்க இதுக்கொரு உபபத்தியை இட்டு ஏத்தபாட்டாதே. (அன்னதேபேசும்) பின்னையுமிதுக்கு உத்தரமாக மேன்மேலென (உ) "శుకో ముక్తః వామదేవో ముక్తః- சுகோமுக்த: வாமதேவோமுக்த:" என்று வசநம்படிக்கிறவித்தால் என்ன லாபமுண்டு? (அறிவில்) அவர்களாகிறார் தந்தாமுக்கென்ன ஒரு விவேகமில்லாத அறிவுகேடர்.

(அறிவில் சிறு மனத்து) இப்போது அறிவில்லையேயாகிலும் மேல் அறிவு உண்டாகைக்கீடான நெஞ்சில் அகலமுமில்லை. (ஆங்கன்னவரைக்கற்பிப்போம்யாமே) அவ்வவஸ்த்தாபந்நரானவர்களைக் கற்பிக்கை நமக்கு பரமாவதே! கையிலே மடலையெடுத்துக்கொண்டு இரண்டருகுள்ளாரும் மலைக்கப் பெரிய திருநாளில்போலே

(க) சாரீரகமீமா - ச. (உ)

மூ.— அதுநிற்க கஅ

முன்னம்நான் சொன்ன வறத்தின் வழிமுயன்ற,

அந்.—அதுநிற்க, நான், முன்னம், சொன்ன, அறத்தின் வழி, (௬) முயன்ற,

அர்.—அதப்படியிருக்க, நான், ஆதியில், சொன்ன, தர்மமார்க்கத்தை, (௬) அநுஷ்டித்த,

---

உலாவித்திரியலாயிருக்க அவ்வறிவுகேடரை யறிவிக்கை நமக்கு பரமாவதே!

(அதுநிற்க) இப்போது அத்தை விடுக. (முன்னம் நான் சொன்ன வித்யாதி) முன்பு நான் இந்த நாலு புருஷார்த்தத்தையும் சொல்லுகிறவிடத்திலே, தர்மத்திலே வந்தவாறே, ஸாத்யரூபத்தாலும் ஸாதநரூபத்தாலும் நிற்பதோராகாரத்தைக்கொண்டு "மன்னுமறம்" என்றேன், இஹலோக போகத்தை வ்யாவர்த்திக்கைக்காகச் சொன்னேனத்தனை; அதில் நான் நினைத்த அம்சமறியாதே குவாலுண்டாக நினைத்திருக்கக்கூடும் அறிவுகேடராயிருப்பாராயிற்று. (௧) "𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑍇𑌽𑌪𑌿 𑌪𑌾𑌤𑌭𑍀𑌤𑌸𑍍𑌯 𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌿𑌃-ஸ்வர்கேபிபாதபீதஸ்ய க்ஷயிஷ்ணோர்நாஸ்தி நிர்வ்ருதி:", அதுக்காக அவ்விடத்தை ஸ்பஷ்டமாகச் சொல்லாநின்றேன் கேளுங்கள்.

(முன்னம் நான் சொன்ன அறத்தின்வழி முயன்ற) முன்பு நான் சொன்ன அறத்தை சாஸ்த்ரோக்தமாக அநுஷ்டித்தவர்கள். அறத்தின்வழியென்கையாலே - அந்த உபாயாநுஷ்டாநத்தினுடைய மிறுக்குத் தோற்றுகிறது. அது அநுஷ்டிக்குமிடத்தில், கரணம்தப்பினால் மரணம், அதில் ஏதேனுமொரு ஸ்வரத்திலே அங்கத்திலே வைகல்யம் பிறக்கில் பின்னை ப்ரஹ்மரக்ஷஸ்ஸாய்ப் பிறக்குமித்தனை. (அன்னவர்தாம் கண்டீர்கள்) அத்தை அருமை

அரு.—மோக்ஷத்தைத் தூஷித்தார்கீழ்; மேல் தர்ம பலமான ஸ்வர்க்கத்தைத் தூஷிக்கிறார் (முன்னம் நான் சொன்ன) இத்யாதி. இஹலோகபோகத்தை அல்பம் அஸ்த்ிரம் என்று வ்யாவர்த்திக்கைக்காகஸ்வர்க்கபோகஸாதநமான தர்மத்தை "மன்னுமறம்" என்று ச்லாகித்துச் சொன்னேனத்தனையென்றபடி.

மூ.—அன்னவர்தாங் கண்டீர்களாயிரக்கண் வானவர்கோன்,
பொன்னகரம்புக்கமரர் போற்றிசெப்பப்,—பொங்கொளி
சேர்
கொன்னவிலுங்கோளரிமாத்தான்சுமந்தகோலம்சேர்,

அந்.—அன்னவர்தாம் கண்டீர்கள், ஆயிரம்கண், வானவர்கோன், பொன், நகரம், (ரு) புக்கு, அமரர், போற்றிசெப்ப, பொங்கு, ஒளி, (௧௦) சேர், கொல்நவிலும், கோள், அரிமா, தான், (௧ரு) சுமந்த, கோலம்சேர்,

அர்.—அப்படிப்பட்டவர்கள்கிடீர், ஆயிரம்கண்களையுடையனாய், தேவர்களுக்கதிபனான இந்த்ரனுடைய, ஸ்ப்ருஹணீயமான, நகரத்தில், (ரு) ப்ரவேசித்து, (அங்குள்ள) தேவர்கள், கொண்டாட, கிளர்ந்த, தேஜஸ்ஸு(௧௦) பொருந்தியும், கொல்லுகையை அப்யஸித்ததும், பலமுடையதுமான, ஸிம்ஹம், தானே, (௧ரு) தாங்கிக்கொண்டிருக்கிற, அழகமைந்த,

---

ப்பட்டநுஷ்டிக்க அப்படிப்பட்ட அவர்கள். (ஆயிரக்கண் வானவர்கோன்) இங்கு நின்றும் போகிறவனுக்கு நிர்வாஹகனாயிருக்கிறவன் ஆயிரம்கண்கொண்டாயிற்று அவ்விஷயத்தை யநுபவிப்பது. (பொன்னகரப்புக்கு) அதில் ஶ்லாக்யமான தேசவாஸமேயமையுமென்னும்படி யிருக்கிறவிடத்தே போய்ப்புக்கு. (அமரர் போற்றிசெப்ப) (க) "முடியுடைவானவர் முறைமுறை யெதிர்கொள்ள" என்னுமாபோலே அங்குள்ள தேவர்கள் "ஆர்த்தபரராய் ஸம்ஸாரத்திலேயிருந்து இக்காமபுருஷார்த்தத்தை ஆதரித்து இதுக்கிடாகத் தன்னை யொறுத்து ஸாதநாநுஷ்டாநம்பண்ணி வருவானொரு மஹாத்மா உண்டாவதே!" என்று கொண்டாட.

(பொங்கொளிசேர்) காலம்செல்லச்செல்ல ஒளிமழுங்குகையன்றிக்கே புண்யபலமாகையாலே மிக்குவாராநின்றுள்ள ஒளிசேர்ந்திருப்பதாய். (கொல்நவிலுங்கோளரிமா) கொலையைச் செய்யாநிற்பதுமாய், "எழுந்திருந்துபாயுமா போலே" என்று சொல்லலாம்படியாய்ப் பெரியமிடுக்கையுடைத்தாயிருந்துள்ள ஸிம்ஹங்களானவை. (தான்சுமந்த) ஹ்ருதயத்திலே பரிவோடேசுமந்தாற் போலேயாயிற்று தரிக்கும்படி. (கோலஞ்சேர்) நாநாவானவகுப்புக்கள் ஸஹஜமானாற்போலே பொருந்தி யிருக்குமாயிற்று. (மன்னிய சிங்காசன

(க) திருவாய் - ௧௦ - ௯. அ.

மூ.—மன்னிய சிங்காசனத்தின்மேல்,—வாள்நெடுங்கண்
கன்னியராலிட்ட கவரிப் பொதியவிழ்ந்து, ஆங் உக
கின்னிளம்பூந்தென்றலியங்க,—மருங்கிருந்த
மின்னனைய நுண்மருங்குல்மெல்லியலார் வெண்முறுவல்
முன்னம்முகிழ்த்த முகிழ்நிலாவந்தரும்ப,

அந்.—மன்னிய, சிங்காசனத்தின்மேல், வாள், நெடும் கண், கன்னியரால், (ரு) இட்ட, கவரிப்பொதி, அவிழ்ந்து, ஆங்கு, இன், (கo) பூ, இளம் தென்றல், இயங்க, மருங்கு இருந்த, மின் அனைய, (கரு) நுண், மருங்குல், மெல்இயலார், முன்னம், முகிழ்த்த, (உo) வெண் முறுவல், முகிழ், நிலா, வந்து, அரும்ப,

அர்.—சிரகாலஸ்த்தாயியான, ஸிம்ஹாஸநத்தின்மேலே (இருந்து), வாள்போல்தீக்ஷ்ணமாய், நீண்ட கண்களையுடைய, கன்னிகைகளாலே, (ரு) போடப்பட்ட, சாமரத்திரள்கள், மலர்ந்து, அவ்வவஸ்த்தையில், இனிதாய், (கo) பரிமளமுள்ள, மந்தமாருதம், உலாவ, பக்கங்களிலிருக்கிற, மின்போல், (கரு) ஸூக்ஷ்மமான, இடையையுடைய, ம்ருதுஸ்வபாவரான, பெண்களுடைய, அபிப்ராயத்தை, ப்ரகாசிப்பிக்கிற, (உo)*வெண்மையான, மந்தஸ்மிதமாகிற, இளம்பருவமான, நிலாவானது, வந்து, பரவ,

---

த்தின்மேல்) ஸாம்ஸாரிகமான போகங்களிற் காட்டில் நாலுநாளை பூவிருந்து எழுந்திருக்கலாம்படியான ஸிம்ஹாஸநத்தின்மேலே. (வாள்நெடுங்கண் கன்னியராலித்யாதி) ஓராளுமொருநோக்கும் நேரானகண்களை யுடையராய், காலதத்வமுள்ள தனையும் புஜியாநின்றாலும் அபூர்வைகளாயிருக்கும் ஸ்த்ரீகளாலே இடப்பட்ட கவரித்திரள் கட்டவிழ்ந்து, அவ்விடத்திலே இனியதாய் மந்தமாய் பரிமளத்தை யுடைத்தானதென்றல் ஸஞ்சரிக்கக், கிண்ணகத்தை எதிரிடவொண்ணாதாற் போலே போக்யதையின் மிகுதியாலே நெருக்கவொண்ணாதே அருகேயிருக்கவேண்டியவராய், "விழேல்" என்னப்பண்ணும் மின்னைப்போலியென்னப்படும் நுண்ணியமருங்கையுடையருமாய், ம்ருது ஸ்வபாவைகளுமா யிருக்கிறவர்களுடைய ஹ்ருதயத்திற்கிடக்கிற பூக்கொய்கையாகிற கார்யத்தைக்காட்டுகிற வெளுத்த முறுவலாகிற இளநிலாவந்தரும்ப.

மூ.—அன்னவர்தம் மானோக்கமுண்டாங் கணிமலர்சேர், ஙங
பொன்னியல் கற்பகத்தின் காடுடுத்த மாடெல்லாம்,
மன்னிய மந்தாரம் பூத்த மதுத்திவலை, உச
இன்னிசை வண்டமரும் சோலைவாய் மாலைசேர்,

அந்.—அன்னவர்தம், மானோக்கம், உண்டு, ஆங்கு, அணி, (௫) மலர், சேர், பொன், இயல், கற்பகத்தின், (௧௦) காடு, உடுத்த, மாடு எல்லாம், மன்னிய, பூத்த, (௧௫) மந்தாரம், மது, திவலை, இன், இசை, (உ௦) வண்டு, அமரும், சோலைவாய், மாலை, சேர், (உ௫)

அர்.—அப்படிப்பட்ட ஸ்த்ரீகளுடைய, மான்போன்ற வீக்ஷணத்தை, அநுபவித்து, அவ்விடத்தில், நெருங்கிய, (௫) பூக்கள், அமைந்திருக்கிற, பொன்னின், ஸ்வபாவத்தையுடைய, கல்பகவ்ருக்ஷங்களினுடைய, (௧௦) வநத்தினால், சூழப்பட்ட, பக்கப்ரதேசங்களெல்லாம், பொருந்தியும், புஷ்பித்துமிருக்கிற, (௧௫) மந்தாரவ்ருக்ஷங்களினுடைய, (பூவின்) தேனினுடைய, பிந்துக்களில், போக்யமான, சப்தத்தையுடைத்தான, (உ௦) வண்டுகள், பொருந்தியிருக்கிற, தோப்புகளிலேயுண்டான், (பூ) மாலைகளோடே, சேர்ந்து, (உ௫)

அப்படிப்பட்டவர்கள் மான்போல் நோக்கை புஜித்து,

புண்யபலத்தாலே நினைத்தபோதே முன்புதோன்றுகிற சோலையிலே, முறுவலால்தோற்றுவித்தபூக்கொய்கையைப்பேசுகிறது. (மன்னிய) நிலைநிற்கும் கற்பகங்கள். (இன்னிசை வண்டமரும்) (க) * குடியாவண்டு கள்ளுண்ணச் சிற கோசையிலே யறியுமித்தனை.

அரு.—"முன்னம் முகிழ்ந்த" வெண்முறுவல் - சற்றே அலருகிற முறுவல், மந்தஸ்மித மென்றபடி. முறுவலாகிற முகிழ்நிலா - ப்ரதமாசந்த்ரன் போன்ற தந்தபங்க்தியையுடையவர்களென்றபடி.

மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (புண்யபலத்தாலே) இத்யாதி. "மாடு"-பர்யந்தமெல்லாம். "அணிமலர்சேர் பொன்னியல்" பொன்போலே ஸ்ப்ருஹணீயமாயிருக்கிற. கற்பகத்தின் காடுடுத்த" கற்பகக் காட்டாலே சூழப்பட்டு. "மன்னிய மந்தாரம்பூத்தமதுத்திவலை" மந்தாரவ்ருக்ஷத்தினுடைய பூவிலே மதுபானம் பண்ணின வண்டுகள் பாடாநின்றார்கள். "வண்டமரும்" பூவோடே பொருந்தினபொருத்தம். சிறகோசையிலேயறிகை யொழிய வண்டைக்காணப்போகாதென்கை.

(க) திருமொழி - ௯ - க - ௭.

மூ.—மன்னிய மாமயில்போல் கூந்தல்,—மழைததடங்கண் ௨௫
மின்னிடையாரோடும் விளையாடி வேண்டிடத்து,
மன்னு மணித்தலத்து மாணிக்க மஞ்சரியின், ௨௬
மின்னி னொளிசேர் பளிங்குவிளிம்படுத்த,
மன்னும் பவளக்கால் செம்பொன்செய் மண்டபத்துள், ௨௭
அன்ன நடைய வரம்பையர்தங் கைவளர்த்த,

அந்.—மன்னிய, மா, மயில்போல், கூந்தல், மழை, (௫) தடம், கண், மின், இடையாரோடும், வேண்டிடத்து, (௧௦) விளையாடி, மன்னு, மணி, தலத்து, மாணிக்கம், (௧௫) மஞ்சரியின், மின்னின் ஒளி, சேர், பளிங்கு, (௨௦) விளிம்பு, அடுத்த, மன்னும், பவளம், கால், (௨௫) செம், பொன், செய், மண்டபத்துள், அன்னநடைய, (௩௦) அரம்பையர்தம், கை, வளர்த்த,

அர்.—அமைந்த, பெரிய,மயில் (தோகை) போன்ற, மயிர்முடியையுடையராய், குளிர்ந்து, (௫) விசாலமான, கண்களையும், மின்போலதிஸூக்ஷமமான, இடையையுமுடைய ஸ்த்ரீகளோடு, இஷ்டமான இடத்தில், (௧௦) க்ரீடித்து; அமைந்திருக்கிற, ரத்நமயமான, ப்ரதேசத்தையுடைத்தாய், மாணிக்கத்தினுல்கோத்த, (௧௫) தோரணங்களையுடைத்தாய், மின்னினுடைய, காந்தியை, உடைத்தான, ஸ்படிகங்களின், (௨௦) விளிம்பில், அடுக்கப்பட்டதாய், நிலைநின்ற, பவளங்களினுல் நிர்மிக்கப்பட்ட, தூண்களையுடையதாய், (௨௫) உயர்ந்த, பொன்னினுல், செய்யப்பட்டதான, மண்டபத்துக்குள், ஹம்ஸம்போன்ற கமநத்தையுடைய, (௩௦) அப்ஸரஸ்ஸுக்கள், கையினுல் (தொட்டு), வ்ருத்தியடைவிப்பிக்கப்பட்ட,

---

(மாமயில்) அங்கு இவர்களொப்பனை யிருக்கும்படி.

(விளையாடி) இனி ஒலக்க மிருக்கும்படி சொல்லுகிறது. (வேண்டிடத்து) அபேக்ஷயின்படியே. (மாணிக்கமஞ்சரி) மாணிக்கங்களைக் கோத்துப் பூங்கொத்தாகத் தூக்கி. (மன்னும் பவளக்கால்) § ஆடுவார் சாய்ந்திருக்கை. (அரம்பையர்) தேவஸ்த்ரீகள். (கைவளர்த்த) சீருட்டி வளர்த்தாற்போலே கையாலே நடவீ வளர்த்த.

அரு — "சோலைவாய்", - சோலையிடத்திலே. மாலைசேர்மன்னியமாமயில் போல் கூந்தல் மழைத்தடங்கண் மின்னிடையாரோடும் விளையாடி என்றபடி.

---

§ (பா) பாடுவார்.

மூ.—இன்னிசை யாழ்பாடல்கேட் டின்புற்று,—இருவிசும்பில்
மன்னு மழை தவழும் வாணிலா நீண்மதிதோய்,
மின்னி னொளிசேர் விசும்பூரும் மாளிகைமேல், ௨௯
மன்னு மணிவிளக்கை மாட்டி,—மழைக்கண்ணார்
பன்னு விசித்திரமாப் பாப்படுத்த பள்ளிமேல், ௩௦
துன்னிய சாலேகம் சூழ் கதவந்தாள் திறப்ப,

அந்.—இன், இசை, யாழ், பாடல், கேட்டு, (௫) இன்புஉற்று, இரு, விசும்பில், மழை, மன்னும், (௧௦) தவழும், வாள், நிலா, நீள், மதி, (௧௫) தோய், மின்னின், ஒளி, சேர், விசும்பு, (௨௦) ஊரும், மாளிகைமேல், மன்னு, மணி, விளக்கை, (௨௫) மாட்டி, மழை, கண்ணார், பன்னு, விசித்திரமா, (௩௦) பா, படுத்த, பள்ளிமேல், துன்னிய, சாலேகம், (௩௫) சூழ், கதவம், தாள், திறப்ப,

அர்.—ஶ்ராவ்யமான, சப்தத்தையுடைய, வீணையினுடைய, பாட்டைக், கேட்டு, (௫) ஸுகத்தையநுபவித்து; பரந்த, ஆகாசத்திலுள்ள, மேகம், நித்யமாக, (௧௦) ஸஞ்சரிக்குமதாய், ப்ரகாசமான, நிலாவையுடைய, உயரத்திலுள்ள, சந்த்ரனோடு, (௧௫) சேர்ந்திருப்பதாய், மின்னினுடைய, காந்தியோடு, கூடின, ஆகாசத்தில், (௨௦) ஸஞ்சரிக்குமதான, விமாநங்களின்மேல், நித்யமாய் (ப்ரகாசிக்கிற), மணிமயமான, தீபங்களை, (௨௫) ஸந்திப்பித்து, குளிர்ந்த, கண்களையுடையபெண்கள், கொண்டாடத்தக்கதாய், ஆஶ்சர்யகரமாகப், (௩௦) பரவப், படுத்த, ஶ்லாக்யமான, படுக்கையின்மேலே, ஜாலகங்களில், (௩௫) சுற்றுமுள்ள, கதவுகள், தாளைத், திறந்துகொள்ள,

---

(இன்புற்று) அந்த போக்யதையை யநுபவித்து.

இனி ஸம்போகாநுபவம் பேசுகிறது. (மழைதவழும்) மேகமிளைப்பாறும்; போக்யனான சந்த்ரனுமப்படியே. (விசும்பூரும்) பள்ளப்பாறையுள்ள ஸ்தலம். (மன்னுமணிவிளக்கை மாட்டி) மாணிக்கத்தினழுக்கைக் கழற்றி நிலைவிளக்காக வைத்து.

(மழைக்கண்ணார்) அடுத்து ஒருகால் பார்க்க காலதத்வமுள்ளதனையும் வவ்வலிடும்படி பண்ணும். (பன்னு) படுக்கை படுத்தபடி கண்டு வாய்புலர்த்த. (விசித்திரம்) நாநாவர்ணமாகப் பரப்பப்படுத்த படுக்கையிலே (துன்னிய) காற்றைப்பிடித்துப் புகுரவிடவற்றாயிருக்கை. (தாள்திறப்ப) வேண்டினபோதே தானே திறப்ப. அவ்வ

அரு.—"விசும்பூரும்" (பள்ளப்பாறை யுள்ளஸ்தலம்) பள்ளங்கண்டவிடமெல்லாம் நீர்நிற்குமாபோலே ஆகாசாவகாசமடைய வ்யாபிக்கிறமாளிகை என்றபடி.

மூ.—அன்ன முழக்க நெரிந்துக்க வாணீலச், ௩௧
சின்னநறுந்தாது சூடி,—ஓர் மந்தாரம்,
துன்னு நறுமலரால் தோள்கொட்டிக், கற்பகத்தின் ௩௨
மன்னுமலர்வாய் மணிவண்டு பின் தொடர,
இன்னிளம்பூந் தென்றல்புகுந் தீங்கிள முலைமேல், ௩௩
நன்னறுஞ் சந்தநச் சேறுபுலர்த்தத்,—தாங்கருஞ்சீர்

அந்.—அன்னம், உழக்க, நெரிந்து, உக்க, வாள், (௫) நீலம், சின்ன, நறும், தாது, சூடி, (௧௦) ஓர், மந்தாரம், துன்னு, நறு, மலரால், (௧௫) தோள் கொட்டி, கற்பகத்தின், மலர்வாய், மன்னு, மணிவண்டு, (௨௦) பின்தொடர, இன், பூ இளம் தென்றல், புகுந்து, ஈங்கு, (௨௫) இளமுலைமேல், நல், நறும், சந்தனச்சேறு, (௩௦) புலர்த்த, தாங்குஅரும், சீர்,

அர்.—ஹம்ஸங்கள், மிதிக்க, (அதினால்) நெரிந்து, துகளாய், ஒளியை யுடைத்தான, (௫) நீலப்பூவினுடைய, சிறியதாய், பரிமளத்தையுடைய, தாதுக்களைச், சூடி, (௧௦) அத்விதீயமான, மந்தாரவ்ருக்ஷத்தினுடைய, நெருங்கி, பரிமளிதமான, புஷ்பங்களைக்கொண்டு, (௧௫) தோளிலே (மாலையாக) எற்றிக்கொண்டு, கல்பவ்ருக்ஷங்களின், பூக்களில், பொருந்தியிருக்கிற, ஶ்லாக்யமான வண்டுகள், (௨௦) அநுஸரிக்க, இனிதாய், பரிமளமுள்ள மந்தமாருதம், நுழைந்து, இவ்விடத்தில், (௨௫) இளம்பருவமான, ஸ்தநங்களின்மேல் பூசப்பட்ட, ஶ்லாக்யமான, பரிமளமுள்ள, சந்தநக்குழம்பை. (௩௦) உலர்த்த, தாங்குகைக்கரியதாய், அழகியதாய்,

---

யிலே புகுந்ததென்றலைப் பேசுகிறது. (அன்னம் உழக்க) அன்னங்கள் புக்கு, அள்ளல் சேற்றை யுழக்குமாபோலே தேனும் சுண்ணமும் தாதும் ஒன்றாக உழக்க, அத்தாலே சிதறுதுகளாய் ஒளிமிக்க நீலப்பூவின் சின்னநறும் தாதை, ராஜாக்கள் வளையம் வைக்குமா போலே வைத்து, மந்தாரப்பூவைத் தோளிலே தோள்மாலையாக ஏறிட்டு, கற்பகத்துக்கெழுதிக்கொடுத்த வண்டுகள் தன்னைக்கொண்டு எழுந்துபோரும்படியாய், மந்தமாய்ப் பரிமளத்தையுடைத்தான தென்றல் நாலடியிட்டுப் புகுந்து, "அல்லோம்" என்பாரும் விழவற்றான போக்யதையையுடைத்தான சந்தநச் சேற்றைச் சிற்றுலவட்டம்போலே முறையிலே யுலர்த்த, தாங்க வரிதாய் சீருடைய

அரு·—"இன்னிளம்பூந்தென்றல்" நாய† மெள்ளப்புகுருகை.

---

‡ இங்குமூல கோசம்ஜீர்ணம்.

மூ.—மின்னிடைமேல் கைவைத் திருந்தேந் திளமுலைமேல், ௩௪
பொன்னரும் பாரம் புலம்ப,—அங்கங் குழைந்தாங்
கின்ன வுருவி னிமையாத் தடங்கண்ணார், ௩௫
அன்னவர்த மானோக்க முண்டாங் கணிமுறுவல்,
இன்னமுத மாந்தி யிருப்பர்,—இதுவன்றே ௩௬
அன்ன வறத்தின் பயனாவது,—

அந்.—மின், இடைமேல், கைவைத்திருந்து, ஏந்து, இளமுலைமேல், (௫) பொன், அரும்பு, ஆரம், புலம்ப, அகம்குழைந்து, (௧௦) ஆங்கு, இன்ன உருவின், இமையா, தடம் கண்ணார், அன்னவர்தம்,* (௧௫) மான்நோக்கம்உண்டு, ஆங்கு, அணி முறுவல், இன், அமுதம், (௨௦) மாந்தியிருப்பர், அன்ன அறத்தின், பயனாவது, இதுவன்றே,

அர்.—மின்போலஸூக்ஷ்மமாயிருக்கிற, இடையின்மேல், (ஸ்த்ரீகள்) கையைவைத்துக்கொண்டிருந்து (வைத்துக்கொண்டிருக்க), உந்நதமாய், இளம்பருவமான ஸ்தநங்களின்மேலே, (௫) ஸ்ப்ருஹணீயமாய், வ்யாபித்திருக்கிற, ஹாரமானது, அலச, மனம்நெகிழ்ந்து, (௧௦) அவ்வவஸ்த்தையில், இப்படிப்பட்ட ரூபத்தையுடைய, இமைகொட்டாத, விசாலமான கண்களையுடைய, அப்படி விலக்ஷணரான ஸ்த்ரீகளுடைய, (௧௫) மான்போன்ற நோக்கை, அநுபவித்து, அவ்வவஸ்த்தையில், அழகிய முறுவலோடேகூடின, போக்யமான, (அதரத்தில்) அம்ருதத்தைப், (௨௦) பாநம்பண்ணி (அங்கே) இருப்பர்கள். அப்படி வருந்திச்செய்த தர்மத்தினுடைய, பலம், இதுவன்றோ?

மின்போன்ற இடைமேலே கையை வைத்துக் காந்தனுக்கு ஸர்வஸ்வதாநம் பண்ணவிருந்து. (பொன்னரும் பாரம் புலம்ப) ஸம்ஶ்லேஷத்தைப் பேசினபடி.

(அகம் குழைந்து) உடன்பட்டபடி. (இன்னவுரு) இட்டு மாற்றினாற்போலிருக்கை. (இமையாத் தடங்கண்ணார்) வைத்த கண் வாங்கவொண்ணாத போக்யதையையுடையவர்கள். (மானோக்கமுண்டு) நோக்குப்பொறுத்தவாறே முறுவல்பண்ண, அதுவுமுண்டறுக்கவல்லராம்படியாயிற்றிருப்பது. (இருப்பர்) போக்யதாதிசயத்தாலே போகமாட்டாமை. (இதுவன்றே) ஒரு சிறுங்கையென்கிறது. க்ருஷிக்குத் தக்க பலம் போராமை.

அந.—"குழைந்து" உடன்படுகை-நீரந்த்ரேண ஸம்ஶ்லேஷமாய், நன்றாகக் கலக்கை,

மூ.— ஒண்பொருளு

மன்ன திறத்ததே யாதலால்—காமத்தின் ௩எ
மன்னும் வழிமுறையே நிற்றுநாம், மானோக்கி
னன்ன நடையா ரலரேச வாடவர்மேல், ௩அ
மன்னு மடலூரா ரென்பதோர் வாசகமும்,
தென்னுரையில் கேட்டறிவதுண்டு,—

அந்.—ஒண்பொருளும், அன்னதிறத்ததே, ஆதலால், காமத்தில், மன்னும் வழி, (௫) முறையே, நாம் நிற்றும், மான்நோக்கின், அன்னநடையார், அலர்ஏச, (௰) ஆடவர்மேல், மன்னும் மடல், ஊரார், என்பது ஓர், வாசகமும், (௧௫) தென்உரையில், கேட்டறிவது உண்டு,

அர்.—அழகியதநமும், அப்படிப்பட்டதே. ஆசையால்,காமபுருஷார்த்தத்திற்குள், ஸ்திரமான வழியிலே (பகவத்காமத்தில்), (௫) க்ரமப்படியே, நாம் நிலைநின்றோம். மான்போன்றநோக்கையும், ஹம்ஸம்போன்ற கமநத்தையுமுடையவர்கள், பழிதூற்றும்படி, (௰) கணவன்மேல், (ப்ராணனைப்) பொருந்தப்பண்ணுகிற மடலை, ஊரார்கள், என்கிற ஒரு, (நிரர்த்தமான) வசநமும், (௧௫) தமிழ்நூலில், கேட்டறியத்தக்கதுண்டு.

(ஒண்பொருளுமன்ன திறத்ததே) ஒண்பொருளுமத்தனையே. ஒண்பொருள் - ஆசார்யர்களையுங்கூட விட்டுப் பற்றுமவன் பக்ஷத்தாலே.

(மன்னும் வழிமுறை) ஆபாஸ காமத்தையொழிய நிலை நின்ற பகவத் காமத்தின்வழியே. (நாம்) காமத்தையொழிய ஸர்வத்தையும் விட்ட நாம். (மான்நோக்கின்) நோக்குக்கும் நடைக்கும் தனித்தனியே மடலூரவேண்டும்படியிருக்கை. (அலரேச) பிறர் பழிசொல்ல. (ஆடவர்) நல்லமகன்பேர். (மன்னுமடல்) ப்ராணனைத் தரிப்பிக்கும் மடல். (தென்னுரை) ம்லேச்ச ஜாதி பிதற்றும் தமிழ். உக்திமாத்ரமே; அர்த்தயுக்தமன்று.

அரு.—"ஒண்பொருளு மன்னதிறத்ததே" அர்த்தமும் கீழ்ச்சொன்னது போலே அஸ்த்திரமாயிருக்கும்.

(க) "மாதர்மடலூரார்" என்றன்றோவிருப்பது, உனக்குமடலூரக்கூடுமோவென்ன (மானோக்கின்) இத்யாதி.

மூ.— அதனையாந்தெளியோம் ௯௯
மன்னும் வடநெறியே வேண்டினோம், வேண்டாதார்
தென்னன் பொதியில் செழும் சந்தனக்குழம்பின், ௱
அன்னதோர்தன்மை யறியாதார்,—ஆயன்வே
யின்னிசையோசைக் கிரங்காதார்,

அநீ.—அதனை, யாம், தெளியோம், மன்னும், வடநெறியே, (ரு) வேண்டினோம், வேண்டாதார், தென்னன், பொதியில், செழும், (௧௦) சந்தனக்குழம்பின், அன்னது, ஓர் தன்மை, அறியாதார், ஆயன், (௧௫) வேய், இன், இசை, ஓசைக்கு, இரங்காதார், (௨௰)

அர்—அதை, நாம், (ஒன்றாக) அறியமாட்டோம். ஸ்திரமான, ஸம்ஸ்க்ருதபாஷையிற் சொன்னமார்க்கத்தையே, (ரு) ஆதரித்தோம். (அதை) ஆதரியாதவர்கள், தென்தேசத்தரசனுடைய, பொதியமலையிலுண்டான, (சைத்யாதி) குண ஸம்ருத்தமான, (௧௦) சந்தநக்குழம்பினுடைய, அப்படிப்பட்ட, ஒரு (பாதாத்வ) ஸ்வபாவத்தை, அறியாதவர்கள்; இடையனுடைய, (௧௫) மூங்கில்குழலிலேயுண்டான, இனிய, காநத்தினுடைய, ஒலிக்குத், தளராதவர்கள்; (௨௦)

(மன்னும் வடநெறி) மடலெடுக்கையே புருஷார்த்தமென்று பபாதிக்கிற ஸ்ரீ ராமாயணாதிகள்.

(வேண்டாதார்) காம புருஷார்த்தத்தை வேண்டாதார். (தென்னன்) சந்தநம் இன்ன பூண்டென்றறியாமை. (செழும்) ருஷிகளையுந் துவளப்பண்ண வற்றாகை. துரும்பு எழுந்தாடவும் பண்ண வற்று. (அன்ன) சொல்ல வாய்வேந்தன்மை யறியாதார். தலைமகனைப் பிரிந்தால் சந்தநம் கொப்பளிக்குமென்றறியாதார். (ஆயன் வேய்) குழலோசை துடை குத்த உறங்கவல்லார். ப்ராஹ்மணர்க்கு ஓத்தும், பாணர்க்குப்பாட்டும்போலே இடையர்க்குக் குழல். அந்த ப்ரஹ்மாஸ்த்ரத்துக் கிலக்காகாதார். (இன்னிசை)* த்வநியே

அந.— "வடநெறி"- ஸம்ஸ்க்ருத ந்யாயம்.

ஸ்த்ரீகள் தான் மடலூராதிருப்பானென்னென்ன ப்ரேமமில்லாமையென்கிறார் (வேண்டாதார்) இத்யாதி. "தென்னன்பொதியில்" (இன்ன பூண்டென்றறியாமை) பொதியமலை சந்தநத்துக்கும் மற்றைமரத்துக்கும் வாசியறியாமை. சந்தநத்தின் வாசியறியாதா ரென்றபடி.

மூ.— மால்விடையின், ௬௧
மன்னுமணிபுலம்ப வாடாதார்,—பெண்ணைமேல்
பின்னுமவ்வன்றில் பேடைவாய்ச் சிறுகுரலுக்கு, ௬௨
உன்னியுடலுருகி நையாதார்,—உம்பர்வாய்த்
துன்னுமதி யுகுத்த

அந்.—மால் விடையின், மன்னும், மணி, புலம்ப, வாடாதார், (௫) பெண்ணைமேல், பின்னும், அவ்வன்றில்பேடை, வாய், சிறு குரலுக்கு, (௧௦) உன்னி, உடல் உருகி, நையாதார், உம்பர்வாய், துன்னு,(௧௫) மதி, உகுத்த,

அர்—(நாகின்மேல்) பிச்சேறின சேக்களுடைய, (த்வநி) பொருந்திய, மணி, சப்திக்க, (அதற்கு) சிதிலராகாதவர்கள்; (௫) பனையின்மேல், (ஒன்றோடொன்று) பின்னிக்கொண்டிருக்கிற (வாயலகையுடைய), அந்த அன்றிலின்பேடையினுடைய, வாயிலேயுண்டான, சிறிய (ஆர்த்த) நாதத்தைக்கேட்டு, (௧௦) (தன்னுடைய பர்த்ருஸம்ஶ்லேஷத்தை) நினைத்து, சரீரம்கரைந்து, சிதிலராகாதவர்கள்; ஆகாசத்தில், நெருங்கிய (கிரணங்களையுடைய), (௧௫) சந்த்ரன், சொரிந்த,

---

நஞ்சு. இது பாதகமாகிறது - அவனுடைய ஸாந்த்வநங்களை நினைத்து. (மால்விடையின் மன்னுமணி புலம்ப வாடாதார்) நாகின்மேலே பிச்சேறின விடையினுடைய த்வநியோவாதே மணி புலம்ப, அக்நிஸகாசத்திலே தளிர் சுருங்குமாபோலே சுருளாதார். இது தானிருக்க அது தான் மேலே விழும்படி.

(பெண்ணையித்யாதி) அன்றிலினுடைய ஆர்த்த நாதத்தைக் கேட்டும் உருகியிரங்காதவர்கள். (பின்னும்) வாயலகு கோத்திருக்கை. முன்பில் வ்யஸநத்துக்கு மேலே யென்றபடியாம். (சிறுகுரல்) ப்ரணயத்தாலே யிளைத்துப் பேசுகிறபடி. (உன்னி) தங்கள் ஸம்ஶ்லேஷத்தை ஸ்மரித்து.

(உம்பர்வாய்) தலைமகனையொழிய நிலவிலே படுக்க வல்லவர்கள். "உம்பர்வாய்" என்றது-ஆகாசத்திலே; உகுத்த,-ஸ்வாநுமாநத்தாலே அவனும் பொறுக்கமாட்டாமே உகுத்தானென்றிருக்கிறாள்.

அரு.—" மதியுகுத்த " ஸ்வாநுமாநம் - தனக்கு நிலாச்சுடுகையாலே சந்த்ரனுக்கும் நிலாச்சுட்டுப் பொறுக்கமாட்டாமையாலே உகுத்தானென்றிருக்கை.

மூ.— தூநிலாநீணெருப்பில், ௪௩
தம்முடலம்வேவத் தளராதார்,—காமவேள்
மன்னும்சிலைவாய் மலர்வாளி கோத்தெய்யப், ௪௪
பொன்னெடுவீதி புகாதார்,—

அந்.—தூநிலா, நீள்நெருப்பில், தம் உடலம், வேவ, தளராதார், (௯) வேள்காமன், சிலைவாய், மன்னும், மலர்வாளி, கோத்து, (௧௦) எய்ய, பொன், நெடுவீதி, புகாதார், தம்பூஅணைமேல், (௧௫)

அர்.—நிர்மலமான நிலவாகிற, பெருநெருப்பில், தம்முடைய சரீரம், வேவாநிற்கச்செய்தே, சிதிலமாகாதவர்கள்; (௯)•சூரனான மந்மதன், தநுஸ்ஸிலே, பொருந்திய, புஷ்பபாணங்களைத், தொடுத்து, (௧௦) அடிக்க, (அதற்கஞ்சி) அழகிய, பெருந்தெருவிலே, ப்ரவேசியாதவர்கள்; தம்முடைய புஷ்பசயநத்தின்மேல், (௧௫)

(தூநிலா) கொப்பளித்தபின்பு நிலவென்றறிந்தாள். (நீள்நெருப்பில்) தாஹ்யம் சமைந்தாலும் சமையாதொழிகை. அக்நிகணம் நிலவென்னும்படி சுடுகை. கேவலாக்நிதஹிப்பது சரீரத்தையிறே. இது ஆத்மாவை தஹிக்கையாலே “நீள் நெருப்பு” என்கிறாள். நீருக்கு அவியாதே (௧) * நீர்வண்ணனே அவிக்கவேண்டியிருக்கை. (தம்முடலம் வேவத்தளராதார்) இரவலுடம்பல்லவே. தம்முடலம் வேவத்தரிப்பாருண்டாகாதே; (௨)*உணர்வுமுயிருமுடம்பும் மற்றுலப்பிலனவும் பழுதேயாமுணர்வைப் பெற்றிருக்கிறருமல்லரே.

(காமவேளித்யாதி) காமனுடைய சிலையிடத்துப் பொருந்தியிருந்துள்ள புஷ்பபாணங்களைத் தொடுத்தெய்ய, அழகியதாய் நெடிதான வீதியிலே கையும்மடலுமாய்ப் புறப்படாதே ஸ்த்ரீத்வம் நோக்கிப் படிகிடந்து புறப்படாதே அடைத்துக் கொண்டு உள்ளேயிருக்கவல்லவர்கள். பொன்-அழகு. மடலூருவாரை எதிர்கொள்ளும்வீதி. (புகாதார்) காமபாணங்கள் வாய்மடியும்படி கல்மதிளுக்குள்ளே புகாதார்.

அந.—“நீணெருப்பு” நீறுக்கல், ஸதாஎரிதல், கொடிதாதல், இவற்றையருளிச்செய்கிறார் (தாஹ்யம்) (இத்யாதி)

(கல்மதிள்) மடலெடுக்கை.

(௧) திருநெடு - ௪அ. (௨) திருவாய் - அ - அ - ௩.

மூ.— தம்பூவணைமேல்
சின்ன மலர்க்குழலு மல்குலும் மென்முலையும், ௪௫
இன்னிளவாடை தடவத்தாங் கண்டுயிலும்,
பொன்னனையார் பின்னுந் திருவுறுக,—போர்வேந்தன் ௪௬

அந்.—சின்னமலர், குழலும், அல்குலும், மென்முலையும், இன் இளவாடை, (௯) தடவ, தாம், கண்துயிலும், பொன்னனையார், பின்னும், (௧௦) திரு, உறுக, போர்வேந்தன்,

அர்.—சிறிய புஷ்பங்களோடுகூடின, குழலையும், நிதம்பத்தையும், ம்ருதுவான முலைகளையும், இனிதான மந்தமாருதம், (௯) ஸ்பர்சிக்கத், தாங்கள், நித்ரைசெய்கிற, பொன்போன்ற அப்பெண்கள், எப்போதும், (௧௦) (அந்த) ஸம்பத்தையே, பொருந்தியிருக்கட்டும். ரணசூரனாகிய சக்ரவர்த்தித்திருமகன்,

(தம்பூவணை) காந்த கரஸ்பர்சம்போலே, தென்றல் ஸ்பர்சிக்கப் படுக்கையை பொருந்திக் கிடக்கவல்லவர்கள். இருவர்க்குப் படுத்தபடுக்கையிலே தனியேகிடக்க வல்லவர்கள். (பூவணை) (௧) "மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளி" என்னுமாபோலே நெருப்பை யுருக்கிவார்த்தாற் போலேயிருக்கை. (சின்னமலர்க்குழலும்) சின்னப்பூவை யுடைத்தான குழலையும். இடையையும், முலையையும், அவன் தடவுமாபோலே நஞ்சூட்டின இளவாடைதடவ. (இளவாடை) பிறரைநலியாநலிய இளகிப்பதியாகின்றது.

(தாம்கண் துயிலும்) கண் உறங்குகிறபோதே தம்மதன்று, இரவல் கண்ணாக வேணும். (பொன்னனையார்) நெருப்பிலே கிடந்து நிறம்பெறுவர்கள். காட்டுத்தீகதவிலும் உறங்கவல்ல பாக்யவதிகள். (பின்னும் திருவுறுக) அவர்களுக்கு நித்யமாகிடுக.

(போர்வேந்தன்) ஆண்புலி; ரணமுகராமன். சக்ரவர்த்தியைக் கட்டிவைத்து ராஜ்யம்பண்ணவல்லமிடுக்கு. ஸ்ரீபரதாழ்வான் தோஷப்ரகரணத்திலே (௨) "ந ச ராகவஸ்ய—நசராகவஸ்ய" என்று-ஸப்த

அந.—(பாக்யவதிகள்) வ்யங்க்யம்.

ஆற்றாமையாலே மடலெடுத்தபேருண்டோவென்ன (போர்வேந்தன்) இத்யாதி. சக்தியுண்டென்று மதுக்கு ஸம்வாதமாக அருளிச்செய்கிறார் ஸ்ரீ (பரதாழ்வான்) இத்யாதி. "ந மந்த்ராயா ந ச மாது:—" "நமந்தராயாநசமாதுঃ" என்கிற தோஷ ப்ரகரணம்.

(௧) திருவாய் - ௯ - ௯ - ௪. (௨)

மூ.—தன்னுடையதாதை பணியாலரசொழிந்து,
'பொன்னகரம்பின்னே புலம்ப வலங்கொண்டு, ௪௭
மன்னும் வளநாடுகைவிட்டு,—

அந்.—தன்னுடைய தாதைபணியால், அரசு ஒழிந்து, பொன்நகரம், பின்னே புலம்ப, வலம்கொண்டு, (ஞ) மன்னும், வளம்நாடு, கைவிட்டு,

அர்.—தன் தகப்பனருடைய சொல்லினால், ராஜ்யத்தைஇழந்து, ஸ்ப்ருஹணீயமான அயோத்தியிலுள்ளார், பின்னேமுறையிட, (அவர்களுக்கிசையாத) பலத்தையுடையனாய், (ஞ) குலக்ரமாகதமாய், ஸம்ருத்தமான தேசத்தை, த்யஜித்து,

ஸாலங்களையும் ஓரம்பாலே யுருவவெய்தவர் இந்தைச் செய்திலர் என்றுகருத்து. (தாதைபணியால்) சக்ரவர்த்தி ஹ்ருதயம் பாராதே உக்திமாத்ரத்திலே. (அரசொழிந்து) வாடல்மாலையைப் புகடிவாரைப்போலே தலைச்சுமையென்று திருவபிஷேகத்தை யொழிந்து.

(பொன்னகரம்) பொன்னுலகுக்கு ஒக்குங்காணும் திருவயோத்யை. அதுக்குக்காரணம்-ராமஸம்ஶ்லேஷகரஸராயிருக்கை. (க) "అపివృక్షాః పరిమ్లానాస్సపుష్పాఙ్కురకోరకాః • அபிவ்ருக்ஷா: பரிம்லாநாஸ்ஸபுஷ்பாங்குரகோரகா:" என்கிறபடியே ஸ்த்தாவரங்களுட்பட ராமகுணைகதாரகமாயிறே யிருப்பது. (பின்னேபுலம்ப) பிரியில் தரியாதே பின்னே தொடர்ந்து கூப்பிட. (உ) "சுற்றமெல்லாம் பின்தொடர". (வலங்கொண்டு) சீர்மையிட்டுப் பேணின பெருமாள் போகவல்லரானமிடுக்கு.வலம்-பலம். (மன்னும்) இவர்களுக்குக்ரமாகதமாய், இவ்வூரிலினிதானநாடு. (ந) "మమత్వశ్వానివృత్తస్య న ప్రావర్తన్త వర్త్మని। ఉష్ణమశ్రు విముఞ్చన్తో రామే సంప్రస్థితే వనమ్- மமத்வச்வாநிவ்ருத்தஸ்யநப்ராவர்தந்தவர்த்மநி| உஷ்ணமஶ்ருவிமுஞ்சந்தோராமே ஸம்ப்ரஸ்த்திதேவநம்" என்று இவையுமகப்பட கோவுமைப்போன

அரு.—"பொன்னகரம்" (அதுக்கு) பொன்னுலகுடைக்கு. "மன்னும்" (இவ்வூரில்)-திருவயோத்யையில். எல்லாரும் புலம்பும்படி போருமென்னுதல் "மமத்வஸ்வா" என்று தொடங்கி "வயிறு பிடிக்கும்படி" என்னுமளவாக".

(க) ஸ்ரீராமா - அயோ. ௫௯-௯. (உ) பெருமாள்திரு அ-௬.
(ந) ,, அயோ. ௫௯-௫.

மூ.— மாதிரங்கள்
மின்னுருவில் விண்டேர் திரிந்து வெளிப்பட்டுக், ௪௮
கன்னிரைந்து தீய்ந்து கழையுடைந்து கால்சுழன்று,
பின்னும் திரைவயிற்றுப் பேயேதிரிந்துலவாக், ௪௯
கொன்னவிலும் வெங்கானத்தூடு,— கொடுங்கதிரோன்
துன்னுவெயில் வறுத்த வெம்பரல்மேல்,—

அந்.—மாதிரங்கள், மின்உருவில், விண்தேர், திரிந்து, வெளிப்பட்டு, (௫) கல்நிரைந்து, தீய்ந்து, கழை, உடைந்து, கால்சுழன்று, (௧௦) பின்னும், திரைவயிறு, பேயே, உலவாதிரிந்து, கொல்நவிலும், (௧௫) வெம்கானத்தூடு, கொடும்கதிரோன், துன்னுவெயில், வறுத்த, வெம்பரல்மேல், (௨௦)

அர்.—திக்குக்களில், மின்னல்போன்ற ரூபத்தையுடைய, கானல், உலாவி, வெறும்தரையாய், (௫) பற்கள்நிறைந்து, (புற்கள்)வெந்து, மூங்கில், பிளந்து, சுழல்காற்று சுற்றியடித்து, (௧௦) அற்குமேல், உலர்ந்த வயிற்றையுடைய, பிசாசங்களே, ஓயாமல் ஸஞ்சரித்து, கொலைச்சொல்லையுடைய, (௧௫) கோடிய வநத்தின் நடுவே (எழுந்தருளும்போது), வெவ்வியகிரணங்களையுடைய ஸூர்யனுடைய, நெருங்கிய வெய்யிலைத், தபிப்பிக்கிற, அத்யுஷ்ணமான பருக்கைக்கற்களின்மேல், (௨௦)

படி. (௧) "திரிந்தது வெம்சமத்துத்தேர்கடவி". இவனும்வநம்போவான், இவனும் தரைகிடப்பான். (௨) "எவ்வாறுநடந்தனை" (௩) "கல்லணைமேல்கண் துயிலக் கற்றனையோ" என்று வயிறு பிடிக்கும்படி. (மாதிரங்கள்) திக்குக்கள். (விண்டேர்) பேய்த்தேர்; §(கானல்.) (வெளிப்பட்டு) கண்ணுக்கிட வொருபூண்டில்லாமை தரைநிரந்தரமான கல்லாயிற்றுக்காணும்; சருகுபோலே தீய்ந்துகிடக்கை. கழை-மூங்கில். கால் சூறுவளி. அதாவது-சுழல்காற்று. (பேயே) மற்றொருவரில்லாமை. (உலவா) ஓவாதே "இன்னான்பட்டான், இன்னான்படாநின்றான்" என்னுமபேச்சேயாய், அறக்கொடிதான காட்டின் நடுவே. (கொடுங்கதிரோன்) கைகேயிபக்ஷத்தை யாஸ்த்தாநம் பண்ணினான். வெய்யில் வறுத்த பரல்தானே எதிரிட்டு வெய்யிலை

அரு.—பேய்த்தேர்-கானல். "கல்நிரைந்து." (நிரந்தரமான) நீரந்த்ரமான. "பின்னுந்திரைவயிற்று" அதுக்குமேலே மடிப்பு மடிப்பாய்த்திரைந்திருக்கிற வயிற்றையுடையபேய்.

---

(௧) உ - திருவ - ௧௫. (௨) பெருமாள் திரு - ௯ - ௨.
(௩) பெருமாள் - ௯ - ௩. § குண்டலிதம்-ப்ரக்ஷிப்தம்.

மூ.— பஞ்சடியால் ௫௦
மன்னனிராமன் பின் வைதேவி யென்றுரைக்கும்,
அன்னநடைய வணங்கு நடந்திலளே,— ௫௧
பின்னுங் கருநெடுங்கண் செவ்வாய்ப் பிணைநோக்கின்,
மின்னனைய நுண்மருங்குல் வேகவதி யென்றுரைக்கும் ௫௨
கன்னி,

அ.—பஞ்சு அடியால், மன்னன், இராமன்பின், வைதேவி என்று உரைக்கும், அன்னநடைய, (௫) அணங்கு, நடந்திலளே, பின்னும், கரு, நெடும்கண், (௧௦) செவ்வாய்; பிணைநோக்கின், மின் அனைய, நுண்மருங்குல், வேகவதிஎன்று உரைக்கும், (௧௫) கன்னி,

அ.—பஞ்சுபோன்ற ஸ்ரீபாதங்களினால், ராஜாவாகிய, சக்ரவர்த்தித் திருமகன்பின்னே, வைதேவிஎன்று சொல்லப்படுகிற, ஹம்ஸகமநத்தையுடைய, (௫) தேவதையான பிராட்டி,செல்லவில்லையோ? அதற்குமேல், கறுத்து, நீண்டகண்களையும், (௧௦) சிவந்த அதரத்தையும், மானின்நோக்குபோன்ற நோக்கையும், மின்னைப்போல், சிறுத்திருக்கிற இடையையுமுடைய, வேகவதியென்று சொல்லப்படுகிற, (௧௫) கன்னிகையானவள்,

---

வறுக்க வற்றாளை. ஆதித்யனை யெற்றிவைத்தெரிக்கை. (பஞ்சடி) மெத்தென்றிருந்த அடி.(க)“பத்ரஸத்மப்ரபா-பத்மஸமப்ரபா.” (மன்னன்) நாட்டுக்குச்சூடின முடிதவிர்ந்து இவளுக்கே சூட்டினமுடி. சக்ரவர்த்தி தன்னை நீர்வார்க்கப்புக, ஐயர் வந்தாரென்ன, அதிலே தோற்றாற்போலே ராஜ்யத்தை போகட்டவேண்டப் பாட்டிலே தோற்றபடி. (இராமன்) பெருமாள் பின்போவார்க்கு இக்காடு அன்றாகில் எது கொண்டாலேனும். (வைதேவி) அவனுக்குப்பிறந்தாளொன்னும் வேண்டப்பாடு. (அன்னநடைய) நடைகண்டால் மடலூரவேண்டும்படியிருக்கை. (அணங்கு) இவனைக்குறித்து அவளை தைவமென்னவேண்டும்படியாயிருக்கை. (நடந்திலளே) அவளுங் கூடப் போனாளில்லையோ?

(பின்னும்) பிராட்டியைப் பேசின வாயாலே பின்னையும் பேசலாவாளொருத்தி.

(கன்னி) அநுபவித்தவளல்லள். பிராட்டியைப்போலே

அரு.—“வெம்பரல்” (எற்றிவைத்த) அவனையும் பிடித்து எரிக்கவற்றான உஷ்ணத்தை யுடையது. “மன்னன்” ஐயர் வந்தாரென்று தன்னை த்ருணீகரித்த வச்செயலிலே தோற்றாற்போலே ராஜ்யத்தை த்ருணீகரித்த அச்செயலிலுந் தோற்றாளென்றபடி.

வேகவதியென்னுங் கன்னிகையுடைய கதை தெரியாது.

மூ.— தன் னின்னுயிராங்காதலனைக் காணாது,
தன்னுடைய முன்தோன்றல் கொண்டேகத் தான்சென்று,
ஆங்கன்னவனை நோக்காதழித்துரப்பி,—வாளமருள்
கன்னவில் தோள்காளையைக் கைப்பிடித்து மீண்டும்போய்,
பொன்னவிலுமாகம் புணர்ந்திலளே,—பூங்கங்கை

அந்.—தன்னுடைய, முன்தோன்றல், தன், இன்உயிராம், காதலனை, (ரு) காணாது, கொண்டுஏக, அங்கு, அழித்து, அன்னவனை, (க0 நோக்காது, உரப்பி, வாள்அமருள், தான்சென்று, கல்நவில், (கரு) தோள், காளையை, கைப்பிடித்து, மீண்டும், போய், (உ0) பொன்நவிலும், ஆகம், புணர்ந்தில ளே, பூம்கங்கை,

அர்.—தன்னுடைய, மூத்தவன், தன்னுடைய, இனிய ப்ராணனாகிய, ப்ரியனைக், (ரு) காணவொட்டாமல், (தன்னைக்) கொண்டுபோக, அவ்வவஸ்த்தையில், (தன் ஸ்த்ரீத்வத்தை) அழியச்செய்து, அப்படிசெய்த அந்தத் தமயனை, (க0) மதியாமல், வ்யாகுலப்படுத்தி, விளங்குகிற யுத்தத்தில், தான் போய், கல்லோடு ஸமாநமாகச்சொல்லப்பட்ட (த்ருடதரதான), (கரு) தோளையுடைய, யுவாவானவனை, பாணிக்ரஹணம்செய்து, திரும்பி, (இருப்பிடம்) சென்று, (உ0) ஸ்ப்ருஹணீயமாகச் சொல்லப்பட்ட, (அவனுடைய) சரீரத்தை, ஆலிங்கநம்செய்துகொள்ளவில்லையோ? அழகிய கங்காநதியினுடைய,

(க) "సమాద్వాదశతత్రాహం రాఘవస్యనివేశనే। భుఞ్జానామానుషాన్ భోగాన్సర్వకామసమృద్ధినీ- ஸமாத்வாதசதத்ராஹம் ராகவஸ்யநிவேசநே | புஞ்ஜாநாமாநுஷாந் போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ" என்றாற்போலே அநுபவித்தவளல்லள். (முன்தோன்றல்) தமயன் "ஒட்டேன்" என்றிவளைக் கொண்டுபோக. (அழித்துரப்பி) ஸ்வயம்வரமும் நாமேயோவென்றாள். (கன்னவில்தோள்) பந்துவாக்கத்தை யடங்கவிட்டுப் பற்றலானதோள். (காளை) தோள்மிடுக்கும்வேண்டாதே பருவமே யமைந்திருக்கை. (கைப்பிடித்து) யுத்தத்திலே யெல்லாரும் காணப் பிடித்து. (பொன்னவிலுமாகம் புணர்ந்திலளோ) ரத்நத்தின் மேலே விழுந்து தழுவினாள், பிராட்டி கரவதத்தின்று தழுவினாற்போலே.

அரு.—"அழித்துரப்பி" ஒட்டேனென்ற தமயன்முகம்பாராமல் நாயகனண்டையிலே போய்-(ஸ்வயம்வரமும்நாமேயோவென்று) - தன் ஸ்வரூபத்தை யழித்து, தமயனைக் கோபித்தென்றபடி.

நாககன்னியும் அர்ஜுநனைக் குறித்து மடலெடுத்தாளென்கிறாள் (பூங்கங்கை) இத்யாதி.

(க) ஸ்ரீராமா-ஸுந்தர-ஙங-கள.

மூ.—முன்னம்புனல்பரக்கும் நன்னாடன் மின்னாடும், ௫௫
கொன்னவிலும் நீள்வேல் குருக்கள் குலமதலை,
தன்னிகரொன் றில்லாத வென்றித் தனஞ்சயனைப், ௫௬
பன்னகராயன் மடப்பாவை,—பாவைதன்
மன்னியநாணச்சம் மடமென் றிவை யகலத், ௫௭
தன்னுடைய கொங்கை முக நெரியத், தானவன்றன்
பொன்வரை யாகம் தழீஇக்கொண்டு போய்த், தனது ௫௮

அந்.—புனல், முன்னம், பரக்கும், நல்நாடன், மின் ஆடும், (௫) கொல் நவிலும், நீள்வேல், குருக்கள், குலமதலை, தன்நிகர் ஒன்றுஇல்லாத, (௧௦) வென்றி, தனஞ்சயனை, பன்னகராயன், மடம்பாவை, பாவைதன் மன்னிய, (௧௫) நாண், அச்சம், மடம், என்றுஇவை, அகல, (௨௦) தன்னுடைய கொங்கைமுகம், நெரிய, தான், அவன்தன், பொன்வரைஆகம், (௨௫) தழீஇக்கொண்டு, போய், தனது,

அர்.—ஜலம், முன்னே, வ்யாபிக்கிற, விலக்ஷணமான தேசத்தையுடையனாய், மின்னைப்போல் சலிக்கிறதாய், (௫) கொலையைப்பேசுகிற, நீண்ட வேலையுடைய, குருராஜாக்களுடைய, குலத்துக்கு ப்ரதாநனாய், தன்னோடொத்த வேறொருவனை உடைத்தாகாதவனாய், (௧௦) ஜயசீலனான, அர்ஜுநனை, நாகராஜனுடைய, பவ்யதையையுடைய பெண்ணானவள், பெண்ணுக்கு ஸ்வபாவஸித்தமான, (௧௫) லஜ்ஜை, பயம், வணக்கம், என்கிற இவை, தொலையும்படியாகவும், (௨௦) தன்னுடைய ஸ்தாநத்தில் சூசுகம், நெறிக்கும்படியாகவும், தான், அந்த அர்ஜுநனுடைய, பொன்மலைபோன்ற, தேஹத்தை, (௨௫) ஆலிங்கநம்செய்துகொண்டு, (திரும்பிச்)சென்று, தன்னுடைய,

(மின். ஆடும்) ஒளியையுடைத்தாய்ப், ப்ரதிபக்ஷங்கள் கண்டபோதே வயிறு அழுகும் நீள்வேல். (தன்நிகர்) வீரத்துக்கு எம்பெருமானுமெதிரன்று. (தனஞ்சயனை) ஊர்வசியை "தாய்" என்ற வல்லவன். (மடப்பாவை) நாகராஜாவின் பெண்பிள்ளை. (பாவை) அவன் மகள். பாவையென்கிறது-ஸ்த்ரீத்வத்துக்கவ்வருகில்லாமை. (தன்) கடல் வற்றினாற்போலே ஸஹஜமான குணங்கள் குடநீர் வழி

அந.—கங்காஜலம்பாய்கிற நாட்டையுடைய அர்ஜுநன். "குருக்கள் குலமதலை" குருராஜாக்களுக்கு நிர்வாஹகன்.

மூ.—நன்னகரம் புக்கு நயந் தினிது வாழ்ந்ததுவும்,
முன்னுரையில் கேட்டறிவதில்லையே,—சூழ்கடலுள் ௫௯
பொன்னகரஞ் செற்ற புரந்தரனோ டேரொக்கும்,
மன்னவன் வாண னவுணர்க்கு வாள் வேந்தன், ௬௦
தன்னுடைய பாவை யுலகத்துத் தன்னொக்கும்,
கன்னியரை யில்லாத காட்சியாள்,—தன்னுடைய ௬௧
இன்னுயிர்த் தோழியா லெம்பெருமா னீன்துழாய்,
மன்னுமணி வரைத்தோள்

அந்.—நல்நகரம், புக்கு, நயந்து, இனிதுவாழ்ந்ததுவும், முன்உரையில், (௫) கேட்டறிவதில்லையே, சூழ்கடலுள், பொன்நகரம், செற்ற, புரந்தரனோடு, (௬௦) ஏர்ஒக்கும், மன்னவன், அவுணர்க்கு, வாள்வேந்தன், வாணன் தன்னுடைய, (௬௫) உலகத்து, தன்ஒக்கும். கன்னியரைஇல்லாத, காட்சியாள், பாவை, (௨௦) தன்னுடைய, இன்உயிர்த்தோழியால், எம்பெருமான், ஈன்துழாய், மன்னு, (௨௫) மணிவரை தோள்,

அர்,—அழகிய பட்டணத்துக்குள், ப்ரவேசித்து, நிரந்தரம் ஸம்ஶ்லேஷித்து, இனிமையாக வாழ்ந்தாளென்பதையும், இதிஹாஸமான பாரதத்தில், (௫) கேட்டுத் தெளியவில்லையோ? (பூமியைச்) சுற்றியிருக்கிற ஸமுத்ரத்துள்ள, ஹிரண்யநகரத்தை, அழித்த, இந்த்ரனோடு, (௬௦) மிக்க ஸாம்யத்தையுடைய, அரசனைப், அஸுரர்களுக்கு, நிர்வாஹகனை, பாணாஸுரனுடைய, (௬௫) லோகத்தில், தன்னோடொத்த, கன்னி[illegible]யுடைத்தாகாத, பெருமையையுடைய, பெண்ணான உஷை, (௨௦) [illegible]டைய, ப்ரியமான ப்ராண[illegible]ாத்த ஸகியைக்கொண்டு, எனக்கு [illegible], போக்யமான திருத்துழாய்மாலை, பொருந்திய, (௨௫) மணிமயபர்வத[illegible]போன்ற தோள்களையுடைய,

---

ந்தப்போதை. (நல்நகரம்) உங்களைப்போலன்றியே மடலெடுப்பாரைக் கொண்டாடுமூர். (நயந்து) கொண்டாடி; நித்ய ஸம்ஶ்லேஷம் பண்ணி. (முன்னுரை) புண்யத்துக்காகிலும் மஹாபாரதம் கேட்டறிவதில்லையோ?

அநு.—மடலெடுக்கலாமென்றறிகைக்குக் கேளாவிடிலும் புண்யபலத்துக்காகிலும் கேட்கவில்லையோ வென்றபடி.

உஷையும் மடலெடுத்தாளென்கிறாள் (சூழ்கடலுள்) இத்யாதி. 'பொன்னகரஞ் செற்ற புரந்தரன்'' இந்த்ரன். ருத்ரன். ஜயித்தவிட முண்டா § கண்டு ஈடுபட்டாளென்று மூலத்திலே யர்த்தமாக்கி யருளிச்செய்

---

§ இங்கு பங்க்திபதிதம்.

மூ.— மாயவன்,—பாவியேன் ௬௨
என்னையிது விளைத்த வீரிரண்டு மால்வரைத்தோள்,
மன்னவன்தன் காதலனை மாயத்தால் கொண்டுபோய், ௬௩
கன்னிதன்பால்வைக்க மற்றவனோ டெத்தனையோர்,
மன்னியபேரின்ப மெய்தினாள்,—

அந்.—மாயவன், பாவியேன், என்னை, இதுவிளைத்த, மால்வரை, (௫) ஈர்இரண்டுதோள், மன்னவன் தன், காதலனை, மாயத்தால், கொண்டுபோய், (௧௦) கன்னிதன்பால்வைக்க, மற்று, அவனோடு, எத்தனை ஓர், மன்னிய, (௧௫) பேர்இன்பம், எய்தினாள்,

அர்—ஆஶ்சர்யபூதனாய், (எம்பெருமானோடு சேருகைக்கு ப்ரதிபந்தகமான) பாபத்தையுடைய, என்னை, இப்படிபண்ணின, பெரிய பர்வதம்போன்ற, (௫) நான்குபுஜங்களையுடைய, ராஜாவாகிய க்ருஷ்ணனுடைய, ப்ரீதிவிஷயனான (பௌத்ரனான) அநிருத்தனை, தபஶ்ஶக்தியினால், எடுத்துக்கொண்டுபோய், (௧௦) கன்னிகையான தன்னுடைய பக்கல்வைத்துக்கொள்ள, அதுக்குமேல், அவ்வநிருத்தனோடு, அநேகவிதமாய் அஸத்ருசமாய், அமர்ந்த, (௧௫) பெரிய ஸுகத்தை, அநுபவித்தனள்,

---

(மாயவன்) ப்ரஸங்காத் நினைக்கத் தாமீடுபட்டபடியாலே ஆஶ்சர்ய பூதனென்கிறார். (பாவியேன்) தம்மை யணைத்ததோளை நினைத்துக்கிடையாமை. (பாவியேன்) வழிபோவாரடித்தபடி. ஆழங்காலிலே ஈடுபட்டு "பாவியேன்" என்கிறாள். (என்னையிது விளைத்த) இப்படி மடலெடுக்கப்பண்ணின. (ஈரிரண்டு) இவள் இப்படி படப்பட அவனுக்குத் தோள்பணைத்தபடி. (மன்னவன் றன் காதலனை) எம்பெருமானுடைய ஸ்நேஹத்தை ஒரு வடிவாக வகுத்ததென்னும்படியிருக்கப்போனான் அநிருத்தாழ்வான். (மாயத்தால்) "பெண்கள் களவுகாண்பர்கள்" என்று காவலோடே கண்வளர்ந்தருளுகிறவனைப் பிட்கன்றுபோலே படுக்கையோடே கொடுபோந்தபடி. (கன்னிதன் பால் வைக்க) உஷை ஸ்வப்நத்திலே கண்டவனைச் சித்ரலேகை எழுதிக்காட்டி, இவள் பக்கல் அவனை அவன்றானறியாமே கொடுவந்து வைத்தபடி. (எத்தனையித்யாதி) விலங்கிட்டு வைத்ததும் கூட வாகையாலே அளவில்லாத ஸஹஜமான பெரிய இன்பத்தை புஜித்தாள்.

அந.—கிறார் (மாயவன்) என்று. அவளுடைய வ்யாபாரஞ் சொல்லா நிற்கத்தாமீடுபெடுவானென்னென்ன (வழிபோவார்) இத்யாதி.

மூ.— மற்றிவைதா ௯௪
னென்னாலே கேட்டீரேயேழைகாளென்னுரைக்கேன்,
மன்னு மலையரையன் பொற்பாவை,—வாணிலா ௯௫
மின்னு மணி முறுவல் செவ்வாயுமையென்னும்,
அன்ன நடைய வணங்கு நுடங்கிடைசேர், ௯௬
பொன்னுடம்பு வாடப் புலனைந்தும் நொந்தகலத்,

அந்.—மற்று இவை, என்னாலேதான், கேட்டீரே, ஏழைகாள், என் உரைக்கேன், (௫) மன்னு, மலையரையன், பொன்பாவை, வாள்நிலா, மின்னும், (௧௦) அணிமுறுவல், செவ்வாய், உமைஎன்னும், அன்னநடைய, அணங்கு, (௧௫) நுடங்கு இடைசேர், பொன்உடம்பு, வாட, புலன்ஐந்தும், நொந்து, (௨௦) அகல,

அர்.—பின்னையும் இப்படி மடலூர்ந்தவர்கள்செயலை, என்னாலேயே, கேட்கிறீர்களோ? மந்தமதிகளே! (உங்களுக்கு) எவ்வளவுசொல்லுவேன், (௫) (ஆகிலும் சொல்லுகிறேன்) சலிப்பிக்கவொண்ணாத, மலைகளுக்கரசனாகிய ஹிமவானுடைய, ஸ்லாக்யையான பெண்ணாய், காந்தியையுடைய நிலாவைப்போல், விளங்குகிற, (௧௦) அழகிய புன்நகையையுடையளாய், சிவந்த அதரத்தையுடையளான, பார்வதியென்று சொல்லப்படுகிற, ஹம்ஸகமநத்தையுடைய, தெய்வப்பெண்ணானவள், (௧௫) துவட்சியையுடைய இடையோடு சேர்ந்த, ஸ்ப்ருஹணீயமான உடம்பு, மெலியும்படிக்கும், இந்த்ரியங்களைந்தும், வருந்தி, (௨௦) நீங்கும்படிக்கும்,

---

(என்உரைக்கேன்) இவ்வுதாஹரணம் என்னால் சொல்லிமுடியுமோ?(என்னுரைக்கேன்) என்னால் எவ்வளவு சொல்லலாவது? ஆகிலும் தவிரவொண்ணாதென்று சொல்லக் கேளுங்கோளென்கிறான்.

(மன்னுமலையரையன்) நாட்டுக்கு மச்சமாகப் பெண்பிள்ளை பெற்ற பாக்யவான்.(வாணிலா) ஒளியையுடைய நிலாப்போலே விளங்காநின்றுள்ள ஸ்ப்ருஹணீயமான முறுவல். (நொந்தகல) நாம் பட்

அரு.—பார்வதியும் மடலெடுத்தாளென்கிறாள் (மன்னுமலையரையன்) இத்யாதி. (மச்சமாக) பொன்பரீக்ஷார்த்தமாக அழிக்கிற பொன்னிலே வெட்டிவைத்த அம்சத்தை த்ருஷ்டாந்தமாக எடுத்துக்காட்டுவர்கள், அப்படியே நாட்டிற் பெண்களுக்கெல்லா மிவளையிட்டுச் சொல்லலாம்படி பெற்றபெண்ணென்கிறபடி.

மூ.—தன்னுடைய கூழைச் சடாபாரம் தான்தரித்து, ஆங் ௬௭
அன்ன வருந்தவத்தினூடுபோய்,—ஆயிரந்தோள்
மன்னுகரதலங்கள் மட்டித்து, மாதிரங்கள் ௬௮
மின்னியெரிவீச மேலெடுத்த சூழ்கழல்கால்,
பொன்னுலக மேழுங் கடந்தும்பர் மேல்சிலும்ப, ௬௯
மன்னு குலவரையும் மாருதமும் தாரகையும்,

பதம்.—தன்னுடைய, கூழை, தான், சடாபாரம்தரித்து, ஆங்கு, (ரு) அன்ன, அரும்தவத்தின், ஊடுபோய், ஆயிரம்தோள், மன்னு, (௧௦) கரதலங்கள், மட்டித்து, மாதிரங்கள், மின்னி, எரிவீச, (கரு) மேல்எடுத்த, சூழ்கழல், கால், பொன், உலகம்எழும், (உ௦) கடந்து, மேல், உம்பர், சிலும்ப, மன்னு, (உரு) குலவரையும், மாருதமும், தாரகையும்,

அர்.—தன்னுடைய, மயிர்முடியைத், தானே, ஜடாமண்டலமாக்கித் தரித்துக்கொண்டு, அவ்வவஸ்தையில், (ரு) அப்படிப்பட்ட, க்ரூரதபஸ்ஸினுடைய, மத்யத்தில் (கடைவரையில்) சென்று, ஆயிரம்புஜங்களில், பொருந்தியிருக்கிற, (௧௦) கைகள், (திக்குக்களில்) வ்யாபித்து, நெருப்புப்பொறிகள், மின்னி, அனலெறிய, (கரு) மேலேதூக்கப்பட்டதாய், சுற்றியணியப்பட்ட தண்டைச் சிலம்புகளையுடைய, காலானது, ஸ்ப்ருஹணீயமான, (மேல்) லோகங்களேழையும், (உ௦) ஆக்ரமித்து (இருக்க), மேலே, தேவர்கள், கோஷிக்க, பொருந்தியிருக்கிற, (உரு) குலபர்வதங்களும், காற்றும், நக்ஷத்ரங்களும்,

---

டதோ?வென்று அகல (தன்னுடைய கூழைச் சடாபாரம் தான்தரித்து)பெருமாள் திருமுடியைப் புனைந்தாற்போலே ஜடை.(அரும்தவம்) "தபஸ்ஸு" என்ன வாய்வேம். (ஊடுபோய்) அப்படிப்பட்ட தபஸ்ஸை முடிய நடந்து. (ஆயிரம்தோள்) இத்தலை இப்பாடுபட அத்தலை வளர்ந்தபடி.(க) "நைவதம்சாந்நமசகாந்" என்கிற க்லேசத்தின்படியே படுமவனல்லனென்கை. (மட்டித்து) திக்குக்களிலே செல்ல. (பொன்னுலகம்) திருவுலகளந்தருளின தேசமெல்லாம் உபஹதமானபடி. (சிலும்ப) கிடந்த விடத்தில் கிடவாதொழிகை. குலவரையுள்ளிட்ட பதார்த்தங்களெல்லாம் புன்னைப்

அரு.—"மட்டித்து" திக்குக்களிலே கைவளரச்சென்றென்றபடி. "சிலும்ப" தானேறுகிற வேகத்தாலே தன் கழுத்தில் பூண்ட மாலை சுழலுமா

(க) ஸ்ரீராமா - ஸுந்த - ௬௬ - ௪௨.

மூ.—தன்னினுடனே சுழலச்சுழன்றாடும், ௭0
கொன்னவிலும் மூவிலைவேல் கூத்தன் பொடியாடி,
அன்னவன்றன் பொன்னகலஞ் சென்றாங்கணைந்திலளே, ௭௧
பன்னியுரைக்குங்கால் பாரதமாம்,—பாவியேற்கு

அந்.—தன்னினுடனேசுழல, சுழன்றுஆடும், கொல்நவிலும், மூஇலை வேல், கூத்தன், (௫) பொடிஆடி, அன்னவன்தன், பொன்அகலம், சென்று, ஆங்கு, (௧0) அணைந்திலளே, பன்னிஉரைக்குங்கால், பாவியேற்கு, பாரதமாம்,

அரி.—தன்னுடன்கூடச் சுழன்றுவர, (தான்) சுற்றி நர்த்தநம்செய்கிறவனாய், கொலைச்சொல்லுக்கு விஷயமான, மூன்றுஇலைகளையுடைய சூலாயுதத்தையுடையனாய், நர்த்தநசீலனாய், (௫) பஸ்மதாரியான, அப்படிப்பட்ட ருத்ரனுடைய, அழகிய சரீரத்தைக், கிட்டி, அப்போது, (௧0) ஸம்ஶ்லேஷித்திலளோ? பரக்கச்சொல்லப்புகரால், (பகவத்ஸம்ஶ்லேஷ விரோதியான) பாபத்தையுடைய எனக்கு, பாரதமாயிருக்கும்.

பூப்போலே சுழன்றுவர. (கொல்நவிலும்) ஆசைப்பட்டாரும் வயிறு பிடிக்கும்படியிருக்கை. (மூவிலை) கண் மூன்றானாற்போலே யிருக்கிறதன்றே.

(பொடியாடி) போகத்துக்குச் சந்தநம் பூசினபடி. (அன்னவன்) முகத்தைச் செல்ல வைத்துப் பேசுகிறார். இன்னுமிப்படியிலுள்ளன. (பொன்அகலம்) அவள் பக்ஷத்தாலே. (சென்றாங்கு) இவ்வளவிலும் அவன் வந்திலன். இவள் தானே சென்றவத்தனை. ஓரஞ்சலி பண்ண மேல்விழுந்துடன்றென்கை.

(பன்னியுரைக்குங்கால்) இப்பரப்பு என்னால் பேசிமுடியாது. வ்யாஸபராசராதிகள் பேசுமத்தனை. (பாவியேற்கு) உங்களுக்குச் சொல்லப் பிறந்தேனோ?

அந.—போலே பர்வதாதிகள் சுழன்றதென்றபடி. "மூவிலை" மூன்றுகப்பையுடைய சூலம். சந்தநம் பூசுமாபோலே சாம்பலைப் பூசினானென்றபடி. "அன்னவன்" முகம்மாறுதல். அப்படிப்பட்ட வண்மையுடையனென்னுதல். வ்யாஸாதிகள் பேசுமத்தனை. [பாவியேற்குப் பன்னியுரைக்குங்கால் பாரதமாம்] என்றந்வயம்.

மூ.—என்னுறுநோய் யானுரைப்பக் கேண்மின், இரும்பொழில்சூழ்
மன்னுமறையோர் திருநறையூர் மாமலைபோல்,
பொன்னியலு மாடக்கவாடம்

அந்.—என் உறுநோய், யான்உரைப்ப கேண்மின், இரும்பொழில்சூழ், மறையோர், மன்னும், (ஞ) திருநறையூர், மாமலைபோல், பொன்இயலும், மாடம், கவாடம், (௪௦)

அர்.—எனக்கு ப்ராப்தமானநோயை, நான் சொல்லக்கேளுங்கள்; பரந்த தோப்புக்களாலே சூழப்பட்டதாய், வேதவித்துக்கள், நித்யவாஸம் செய்கிற, (ஞ) திருநறையூரில், பெரியமலைகள் போன்றதாய், பொன்னின் ஸ்வபாவத்தை யுடையதான (ஸ்ப்ருஹணீயமான), க்ருஹத்தினுடைய, கதவைத், (௪௦)

(என்னுறுநோய்) நம்பியபூகிலேயகப்பட்ட ஸ்ரீ பரகாழ்வான் நோவுபோலே. (கேண்மின்) இத்தனையுஞ் செய்யவேணும். (௧) "శోకక్షోభేచహృదయం ప్రలాపైరేవధార్యతే-சோகக்ஷோபேசஹ்ருதயம்ப்ரலாபைரேவ தார்யதே" என்னும்படியாலே தான் பிழைக்கைக்காக.

(இரும்பொழில்) பெண்களுக்கு மடலெடுக்கும்படி பணைமிக்க பொழில். (மன்னுமறையோர்) "மடலெடுக்கை சாஸ்த்ரார்த்தம்" என்று உபபாதிக்குமவர்கள் மன்னும் தேசம். அங்ஙனுண்டோவென்னில்; (௨) "వ్యవసాయాదృతే బ్రహ్మన్నాసాదయతితత్పరమ్-வ்யவஸாயாத்ருதே ப்ரஹ்மந்நாஸாதயதிதத்பரம்" என்று உண்டாகையாலே. (மாமலை) (௩) "సుధాపఙ్కచిత్రకూటౌ-ஸுதாபங்கச்சித்ரகூடௌ" என்னுமாபோலே. பக்தியின் உயர்த்தியாலே உயர்ந்து தோற்றினபடி. (கடந்து) வழிபறிக்கும் தேசத்தைக் கடந்து. பலஹாநி,

---

அந.—இனிமேல் தாம் மடலெடுக்கைக்கு ஹேதுவை யருளிச்செய்கிறார் (என்னுறுநோய்) இத்யாதி. "கேண்மின்" அவர்கள்கேட்டால் தரிக்கலாயிருக்குமோவென்ன (சோகக்ஷோபே) இத்யாதி. சொன்னால் தரிக்கலாயிருக்கும். (வ்யவஸாயாத்ருதே) என்று அத்யவஸாயஞ் சொல்லுகையாலே இது தானே ப்ரமாணமென்பர்கள். "மாமலை" அவனிருக்கையால் வந்தபெருமையென்னுதல், இவள்பக்தியாலே பெருக்கத் தோற்றுதல் "கடந்து" வாசலில் வைலக்ஷண்யமாதல், பலஹாநியாலேயாதல். புக்கென்கையாலே புகுருகிற

---

(௧) (௨)
(௩) ஸ்ரீராமா - அயோ - ௯௮-௧௨.

மூ — கடந்துபுக்கு, எக

என்னுடைய கண்களிப்ப நோக்கினேன்,—நோக்குதலும்
மன்னன் திருமார்பும்

அந்.—கடந்து, புக்கு, என்னுடைய, கண் களிப்ப, நோக்கினேன், (ரு) நோக்குதலும், மன்னன், திருமார்பும்,

அர்.—தாண்டி, (உள்ளே) நுழைந்து, என் கண்கள், ஸந்தோஷிக்கும்படி, பார்த்தேன், (ரு) பார்த்தவளவில், ஸ்வாமியினுடைய, திருமார்பும்,

---

அவன் காண்கை. அவ்வாழுங்காலைத் தப்பினபடி. பலஹாநிக்குமுன்னே புகுமித்தனே. என்னுடைய படபாமுகாக்நி குளிர. (களிப்ப) (க) "கண்களாரளவும் நின்று கண்ண மங்கையுள் கண்டுகொண்டேன்" என்னுமாபோலே நெடுங்காலம் பட்டினிவிட்ட கண்கள் வயிறு நிரம்பும்படி. (உ) நணுகினம்நாமே" (ங) «మన్యేప్రాప్తాస్మ తందేశంభరద్వాజో యమబ్రవీత్-மந்யேப்ராப்தாஸ்மதம்தேசம் பரத்வாஜோயமப்ரவீத்".

(நோக்குதலும் மன்னன்) நான்கண்டபோதே எழுதிக்கொண்டான். வாளும்பலகையும் பொகட்டு, கண்டபோதே மடலெடுக்கப்பண்ணினவன். (நோக்குதலும் மன்னன்) கண்டபோதே தான்என்னலாம்படியிருக்கை. (ச) «రాజాధిరాజస్సర్వేషాం-ராஜாதிராஜஸ்ஸர்வேஷாம்", (திருமார்பும்) தமக்குப்பற்றுசு. விரஹ ஶ்ரமஹரமான மார்வுதன்னைக் கணிசிக்கை. வ்ரீளையாலே முகம்பாராதே மார்வை

அரு.—வருத்தம் அவன் காண்கையென்றபடி. புக்கென்றதுக்கு முந்தின வர்த்தத்திலே யருளிச்செய்கிறார் (அவ்வாழுங்காலல்) இத்யாதி. அன்றிக்கே (அவன் காண்கை) (ரு) "காலாழும்" என்கிறபடியே பலஹாநியாய் அவனைக் காணுவதற்குமுன்னே "புக்கு" என்கிறது (பலஹாநிக்கு) இத்யாதி. நோக்கினேனென்றதெப்படியிருக்கிறதென்ன, "நணுகினம் நாமே" என்னுமாபோலே.

"மன்னவன்" (வாளும் பலகையும் பொகட்டு) தேஹாத்மாபிமாநியாய் அடித்துப் பறித்ததுபோய், தன்னைக்குறித்து மடலெடுக்கும்படி பண்ணுகிறமன்னவன், "மார்பும்" கண்டமட்டிலே முகத்திலே விழியாமல் மார்பிலே விழிப்பானென்னென்ன (பிராட்டி) இத்யாதி. பிராட்டியிருக்கையாலேயாதல்; தானிளைப்பாறுமவஸ்த்தையாகையாலேயாதல்; வ்ரீளையாலேயாதல். ஆக மூன்று ஹேது.

(க) திருமொழி-எ-சு0-க. (உ) திருவாய் - க - க - ங.
(ங) ஸ்ரீராமா - அயோ - கக-க. (ச)
(ரு) பெரியதிருவந்-ஙச.

மூ. வாயுமடியிணையும், ௭௪
பன்னுகரதலமும் கண்களும்,—பங்கயத்தின்
பொன்னியல்காடோர் மணிவரைமேல் பூத்ததுபோல், ௭௫
மின்னியொளி படைப்ப வீழ்நாணும் தோள்வளையும்,

அந்.—வாயும், இணை அடியும், பன்னு, கரதலமும், கண்களும், (௫) பொன் இயல்,பங்கயத்தின் காடு, ஓர் மணிவரைமேல், பூத்ததுபோல், வீழ்நாணும், (௧௦) தோள்வளையும், மன்னிய குண்டலமும், ஆரமும், நீள்முடியும், மின்னி, (௧௫) ஒளிபடைப்ப,

அர்.—திருவதரமும், சேர்ந்த திருவடிகளும், ஸ்துதிக்கத்தக்க, திருக்கைகளும், திருக்கண்களும், (௫) பொன்னின் ஸ்வபாவத்தையுடைய (ஸ்ப்ருஹணீயமான), தாமரைக்காடு, ஒரு நீலமணிமயமான பர்வதத்தின்மேல், புஷ்பித்தாற்போல் (இருக்க), விரும்பப்படும் திருவரைநாணும், (௧௦) தோள்வளைகளும், பொருந்தியிருக்கிற திருக்குண்டலங்களும், ஹாரமும், நீண்ட திருவபிஷேகமும், பளபளத்து, (௧௫) தேஜஸ்ஸை உண்டாக்க,

---

ப்பார்த்தா ளென்றும். திருமார்வென்ற, " வாயும்" என்பானென்னென்னில்; பிராட்டிபக்கல் ப்ரேமத்தாலே அவளைப்பார்த்து முறுவல்பண்ணியிருக்கு மவ்வழியாலே முறுவலைக்கண்டபடி. (வாயும்) அகப்படுத்தும் முறுவல். (அடியிணையும்) அம்முறுவலுக்குத் தோற்றுவிழும் திருவடிகள். (பன்னுகரதலமும்) திருவடிகளிலே விழுந்தாரைத் திருக்கையாலே ஸ்பர்சித்தால், "ஒருகையே!" என்றுவாய் புலர்த்தும்கை. (கண்கள்)நோக்கும் கண்கள், நின்றவிடத்தே நின்று ஸ்பர்சிக்கும் கண், ஒருகால் நோக்கினல் ஆலங்கட்டி விட்டெறிந்தாற் போலேயிருக்கை. (பொன்னியல்) பொற்றாமரைக்காடு, நீலகிரியிலே பரப்பு மாறப்பூத்தாற்போலே திருமேனியிலுண்டான திருக்கண், திருவாய், திருக்கை, திருவடிகளிருக்கும்படியென்று கீழோடே அந்வயம்.

(மின்னியொளிபடைப்ப) பளபளத்த வொளியையுண்டாக்க. (வீழ்நாணும்) விடுநாணும். ஸௌந்தர்யம் திரைத்தாற்போலேயிருக்கை. (தோள்வளை) திருவடிகளுக்கு வீரக்கழல்போலே. (மன்னிய)

மூ.—மன்னிய குண்டலமு மாரமும் நீண்முடியும், ௭௬
தன்னுவெயில் விரித்த சூடாமணியிமைப்ப,
மன்னுமரதகக்குன்றின் மருங்கே,—ஓர் ௭௭
இன்னிளவஞ்சிக் கொடியொன்று நின்றதுதான்,

அந்.—தன்னு, வெயில், விரித்த, சூடாமணி, இமைப்ப, (௫) மன்னு, மரதகக்குன்றின், மருங்கே, ஓர், இன், (௧௦) ஒன்று இளவஞ்சிக்கொடி, நின்றது தான்,

அர்.—நெருங்கிய, கிரணங்களை, வ்யாபிக்கச்செய்த, கிரீடத்தின் நுனியிலுள்ள மாணிக்கமானது, (மற்ற ஆபரணங்களினொளியை) மறைக்க, (௫) ஸ்த்திரமாயிருக்கிற, (ஸர்வேஶ்வரனுகிற) மரதகமலையின், அருகில், அத்விதியமாய், போக்யமாய், (௧௦) ஒரு இளம்பருவத்தையுடைய(பிராட்டியாகிற) வஞ்சிக்கொடி, பொருந்திநின்றதாய்,

---

காதிலே பூத்தாற் போலேயிருக்கை. (ஆரம்) மார்விலே சிணைத்தாற் போலேயிருக்கை. (நீண்முடி) திருநறையூருக்குச் சூட்டினமுடி; ஸர்வேஶ்வரனுகச் சூட்டினபடி. (தன்னுவெயில்விரித்த சூடாமணியிமைப்ப) சூடாமணியினொளி எல்லா வொளியையும் விஞ்ச. தன்னுகை - மிகுகை. அழகு மிக்கால் கண்ணெச்சிலாமென்று மறைப்பாரைப்போலே சூடாமணியில் தேஜஸ்ஸு எல்லாத்தேஜஸ்ஸிலும் மிக்கபோது இளவெயில்போன்றதொரு பிடாம்விழவிட்டாற்போலே யிருக்கை.

(மன்னு) தன்னைப் பற்றி லோகம் வாழ்வதொரு நீலகிரி. (மருங்கு) ஆழங்கால். உள்ளிழியவொண்ணுமை. இருவரும் நேர்பார்க்கமாட்டாமை; பாராதொழியில் தரிக்க மாட்டாமையாதல். (மருங்கே) பெருவெள்ளங்கண்டு தேங்குவாரைப்போலே.

(ஓர்) விலக்ஷணமாய், போக்யமாய் இளையதாயிருப்பதொரு வஞ்சிக்கொடி. கொடியென்றது - அல்லாதபெண்களை "பும்ஸ்த்வகந்தி" என்னும்படியான ஸ்த்ரீத்வம். (௧) "[illegible]-

---

அநு.—"ஆரம்" பூசுணைக்காய்ச் சுணைபோலே பொருந்தியிருக்கை. "சூடாமணி" திருவபிஷேகத்தின் நுனியிலேயிருக்கிற மணி. "மருங்கு" வெள்ளங்கண்டு தேங்குகை - பெரு வெள்ளத்தைக்கண்டால்உள்ளிழியு மதுவுமின்றிக்கே அதினுடைய போக்யதையைக்கண்டு புறம்புபோகவும்மாட்டாமல் கரையிலே நின்றுபார்க்கை.

ஓர் வஞ்சியென்னவமையாதோ, கொடியென்று விசேஷிப்பானென்னென்ன (கொடியென்று) இத்யாதி. கேவலம் வஞ்சியென்றுல் பும்ஸ்த்வ

---

(௧) பாகவ - ௧௦ - ௩௨ - ௨.

மூ.—அன்னமாய் மானா யணிமயிலாயாங்கிடையே, எஅ
மின்னாயிளவே யிரண்டா யிணைச்செப்பாய்,
முன்னாயதொண்டையாய்க் கெண்டைக்குல மிரண்டாய் எகூ
அன்னதிருவுருவம் நின்றதறியாதே,

அந்.—அன்னமாய், மானாய், அணிமயிலாய், ஆங்கு இடையே, மின்னாய், (இ) இள இரண்டு வேயாய், இணை செப்பாய், முன்னாய தொண்டையாய், இரண்டு கெண்டைக்குலமாய், அன்ன நின்றது திருவுருவம், (க௦) அறியாதே,

அர்.—(நடையில்) ஹம்ஸமாய், (நோக்கில்) மானாய், (மயிர்முடியில்) அழகிய மயிலாய், அக்கொடியின் நடுவில், (இடையாகிற) மின்னாய், (இ) (கைகளாகிற) இளம் பருவமுள்ள இரண்டு மூங்கில்களாய், ஒன்றுக்கொன்று பொருந்தியிருக்கிற (ஸ்தநங்களாகிற) கலசங்களாய், (எல்லாவற்றுக்கும்) முன்னே தோற்றுகிறதான (அதரமாகிற) கோவைப்பழமாய், (கண்களாகிற) இரண்டு கெண்டையின் ஜாதியாய், அப்படிப்பட்டதாய் (வாசாமகோசரமாய்) நில்லாநிற்கிற திருவடிவை, (க௦) (உள்ளபடி) அறியமாட்டாதே,

---

ஸாக்ஷாந்மந்மதமந்மதః" என்னுமாபோலேயொன்று. இவளைப்போக்கிவேறொருவரில்லாமைரூபகம்முற்றினபடி-த்ருஷ்டாந்தமேபேசும்படியாயிற்று. (அன்னமாய்மானாய்) அன்னம்-நடை, மான்-நோக்கு. (அணிமயிலாய்) அளகபாரம். (இடையேமின்னாய்) நடுவேமின்னாய். (இளவேயிரண்டாய்) இரண்டின மூங்கில்போலே பசுமையும் சுற்றுடைமையுமுடைய திருத்தோள்கள். (இணைச்செப்பு) ஒன்றுக்கொன்றொப்பு, ஈஸ்வரனையிட்டுவைக்கும் செப்பு. (க) "மலராள் தனத்துள்ளான்". (முன்னாயதொண்டையாய்) எல்லாவற்றிலும் முற்படுகிறது திருவதரத்தினழகு. (கெண்டைக்குலமிரண்டாய்) மௌக்த்யத்தாலும் மதமதப்பாலும் இரண்டு கெண்டைபோலேயாயிற்று திருக்கண்கள். (அன்ன) அப்படிப்பட்டதென்னு மத்தனையன்றி இவ்வழகுக்குத்தக்கவாசகமில்லை. (அறியாதே) அறிவுகெ

அந.—வ்யாவ்ருத்தமான ஸ்த்ரீத்வத்தை மாத்ரம் காட்டுகையாலே; பும்ஸ்த்வஸந்தியான ஸ்த்ரீகளில் வ்யாவ்ருத்தியாலே, ஸ்த்ரீரத்நமென்றபடி. கொடிபோன்றவென்னுமல்கொடியென்பானென்னென்ன (ரூபகம்)இத்யாதி.

(க) ரு - திரு - ரு.

மூ.—என்னுடைய நெஞ்சு மறிவு மினவளையும், ௪௦
பொன்னியலு மேகலையு மாங் கொழியப் போந்தேற்கு,
மன்னுமறிகடலு மார்க்கும்,—மதியுகுத்த, ௪௧
இன்னிலாவின்கதிரு மென்றனக்கே வெய்தாகும்,
தன்னுடைய தன்மைதவிரத் தானென்கொலோ, ௪௨

அந்.—ஆங்கு, என்னுடைய நெஞ்சும், அறிவும், இனவளையும், பொன் இயலும் மேகலையும், (௫) ஒழியப்போந்தேற்கு, மன்னு, மறிகடலும், ஆர்க்கும், மதி உகுத்த, (௧௦) இன், நிலாவின் கதிரும், என்றனக்கே, வெய்தாகும், தன்னுடைய தன்மை, (௧௫) தவிர, என் தான் கொலோ,

அர்.—அத்திருவுருவின் விஷயமாக, என்மநஸ்ஸும், புத்தியும், இப்படிப்பட்ட வளைகளும், பொன்னின் ஸ்வபாவத்தையுடைய அரைநூல் மாலையும், (௫) அற்றுப்போன எனக்கு (பாதகமாக), ஸ்த்திரப்பட்டதாய், அலையெறிகிற ஸமுத்ரமும், கோஷியாநின்றது. சந்த்ரன், விடச்செய்த, (௧௦) இனிய, நிலாவினொளியும், எனக்கே, வெவ்வியதாயிருந்தது, (வஸ்துக்கள்) தன்னுடைய ஸ்வபாவத்தை, (௧௫) விடும்படிக்கு, எவனாவது ஸங்கல்பித்தானோ?

ட்டு, அறியாமையானபடி யெங்ஙனேயென்னில், பருப்பருத்தன சிலபேசி முடியப்பேசமாட்டாமையாலே பிரித்துப்பேசும்போது பேசலாம், இருவரும்கூடி நின்றால் பேசமுடியாது. கண்ணுக்கும் மநஸ்ஸுக்கு மளக்கவொண்ணாதவிஷயமாகையாலும், கண்டாரைக் குமிழ் நீருட்டும்விஷயமாகையாலும் அறியாதேயென்றுமாம்.

(நெஞ்சுமறிவும்) நெஞ்சாவது அறிவு இட்டுவைக்குங்கலம். (ஆங்கொழிய) வெறுந்தரையாகப்போந்தேன். வாழச்சென்று உள்ளதெல்லாங் கொடுப்பாரைப்போலே, ஸர்வத்தையுமிழந்து,கடலில் துரும்புபோலே ஸௌந்தர்யதரங்கங்கள்வீச, "மடலோ" என்று புறப்பட்டபடி.

(மன்னும்) சலியாதகடல். ராஜத்ரோஹிகளைக்கண்டாற்போலே கூப்பிடத்துடங்கிற்று. (என்றனக்கே) நாட்டைவாழ்வித்து என்னை நலியாநின்றது.

(தன்னுடைய) (க) "[illegible] —சீதோபவஹாநா

அரு.—"அறியாதே." இருவர்சேர்த்தியறியப்போகாதேன்னுதல். (வெய்தாகும்) வெவ்விதாகும்.

(க) ஸ்ரீராமா - ஸுந்த. ௩௫-௨௧.

மூ.—தென்னன் பொதியில் செழுஞ்சந்தின் தாதளைந்து,
மன்னிவ்வுலகை மனங்களிப்ப வந்தியங்கும், ௮௩
இன்னிளம்பூந் தென்றலும் வீசுமெரியெனக்கே,
முன்னிய பெண்ணைமேல் முள்முளரிக் கூட்டகத்துப், ௮௪
பின்னு மவ்வன்றில் பேடைவாய்ச் சிறுகுரலும்,
என்னுடைய நெஞ்சுக்கோ ரீர்வாளா மென்செய்கேன், ௮௫

அந்.—தென்னன் பொதியில், செழும் சந்தின், தாது, அளைந்து, மன்னு இவ்வுலகை, (௫) மனம் களிப்ப, வந்து இயங்கும், இன்பூ, இளம் தென்றலும், எனக்கே, (௧௦) எரிவீசும், முன்னிய பெண்ணைமேல், முள்முளரிக் கூட்டகத்து, அவ்வன்றில் பேடை, பின்னும் வாய், (௧௫) சிறு குரலும், என்னுடைய நெஞ்சுக்கு, ஈர் ஓர் வாளாம், என்செய்கேன்.

அர்.—தென்னாட்டரசனுடைய தான பொதியமலையிலுள்ள, ஸம்ருத்தமான சந்தநத்தினுடைய, தாதுக்களை, அவகாஹித்துக்கொண்டு, ஸ்திரமான இந்த லோகத்தை, (௫) மநோல்லாஸத்தை யுண்டுபண்ணுகைக்காக, வந்து ஸஞ்சரிக்கிற, ஸுகஸ்பர்சமாய்ப் பரிமளிதமான, மந்தமாருதமும், என்னொருத்திக்கே, (௧௦) அனலை (க்கொண்டு) வீசாகின்றது. முன்னேயிருக்கிற பனைமரத்தில், முள்ளையுடைய தாமரைத் தண்டினால் செய்யப்பட்ட கூட்டில், அவ்வன்றில் பேடையினுடைய, (புருஷ பக்ஷியின் வாயோடு) பின்னிக்கொண்டிருக்கிற வாயிலேயுண்டான, (௧௫) சிறிய கண்டத்வநியும், என் ஹ்ருதயத்தைக்குறித்து, பிளவாநின்ற ஒரு வாளாய்நின்றது. (நான் இவற்றைப்பரிஹரிக்க) என்ன உபாயத்தை யநுஷ்டிப்பேன்?

மதே" என்ன, நெருப்புக்குளிருமாபோலே, "நிலாச்சுடுக" என்று நினைப்பிட்டதோ? இதுக்குக் காரணமென்னென்கிறாள்.

(தென்னன்பொதி) மலயபர்வதம். (மன்னி) லோகத்தை வாழ்விக்கை நித்யமானாற்போலே எனக்கொருத்திக்குச் சுடுகை நித்யமாயிற்று. (வீசும்) விரஹாக்நி தன்மேல்தட்டாமே.

(முன்னிய) முன்பேநின்றவனை. (முள்முளரி) முள்ளையுடைத்தான தாமரைத்தண்டாலே செய்தகூடு. நெஞ்சுக்குப்புறம்பு நலிகைதவிர்ந்து நெஞ்சையீராநின்றது. (என்செய்கேன்) பிழைக்கவிரகில்லை.

௮௫.—"சந்து - சந்தநம்."

மூ.—கன்னவில்தோள் காமன் கருப்புச் சிலைவளைக்,
கொன்னவிலும் பூங்கணைகள் கோத்துப் பொதவணைந்து, ௮௬
தன்னுடைய தோள்கழிய வாங்கித்,—தமியேன்மேல்
என்னுடைய நெஞ்சே யிலக்காக வெய்கின்றான், ௮௭
பின்னிதனைக்காப்பீர் தானில்லையே,—பேதையேன்

அ.—கல்நவில், தோள்காமன், கருப்புச்சிலை, வளைய, கொல்நவிலும், (௫) பூங்கணைகள், கோத்து, பொத அணைந்து, தன்னுடைய தோள் கழிய வாங்கி, என்னுடைய நெஞ்சே, (௧௦) இலக்காக, தமியேன்மேல், எய்கின்றான், பின், இதனை, (௧௫) காப்பீர்தான்இல்லையே, பேதையேன்,

அ.—(ஸ்த்ரீவதத்தில்) கல்லென்று சொல்லப்படுகிற (த்ருடமான), புஜங்களையுடைய மந்மதன், (தன்னுடைய) கருப்புவில்லை, வளையச்செய்து, (அதில்) ஹிம்ஸகமென்று சொல்லப்படுகிற, (௫) புஷ்பபாணங்களைத், தொடுத்து, (சரீரத்தில்) புகுரும்படி சேர்த்துத், தன் தோள்வரையிலிழுத்து, என் ஹ்ருதயத்தை, (௧௦) லக்ஷ்யமாகச் செய்து, அஸஹாயையான என்மேல், அடியாநின்றான். இப்போது, இதை, (௧௫) (ப்பரிஹரித்துக்)காப்பாற்ற வல்லவர்கள்தானில்லையோ? (நான் அவன் விஷயத்தில்) சபலையானேன்.

(கல்நவில்) பெண்களை நலியநலியப் பூண்கட்டுந்தோள். (பொதவணைந்து) இலக்குத்தப்பாமல்நின்று நெஞ்சையிலக்காக. பெருமாளிலிவனுக்கு விசேஷம்-அமூர்த்தமான நெஞ்சை இலக்காகவெய்கிறான், மாறுகிறிலன். (௧) "ஶரவர்ஷம்வவர்ஷ ஹ - சரவர்ஷம்வவர்ஷஹ" இம்மூலபலத்தைப் பெற்றபோதே. என்னுடைய நெஞ்சென்கிறது-அவனுடைய நெஞ்சிலும் ஓரப்புபட்டாலோ வென்கிறது. (பின்னிதனை) (௨) "லக்ஷ்மணஸ்ய ச தீமத:- லக்ஷ்மணஸ்யச தீமத:" என்னும்படியே பெருமாள்கையில் வில்லை வாங்கினாற்போலே காமன்கையில் வில்லைவாங்குவானொரு தம்பியில்லையே. கடகிட்டுக்காப்பாரில்லையேயென்று.

(பேதையேன்) இவ்வாபத்துக்கிட்டுப்பிறந்தா ளொருத்தி

அ.—பொதவணைந்து அம்புபொதும்படி கிட்டிநின்று. இங்கு மூலபலம்-நெஞ்சு.

---

(௧) ஸ்ரீராமா - யுத்த - ௯௪-௧௮. (௨) ஸ்ரீராமா -

மூ.—கன்னவிலுங் காட்டகத் தோர்வல்லிக் கடிமலரின், அஅ
நன்னறுவாசமற்றோரானு மெய்தாமே,
மன்னும் வறுநிலத்து வாளாங்குகுத்ததுபோல், அகூ
என்னுடைய பெண்மையு மென்னலனு மென்முலையும்,
மன்னுமலர் மங்கைமைந்தன்,—கணபுரத்துப், கூ0
பொன்மலைபோல் நின்றவன்றன் பொன்னகலம் தோயாவேல்,
என்னிவைதான் வாளாவெனக்கே பொறையாகி, கூக

அந்.—கல்நவிலும், காட்டகத்து, ஓர்வல்லி, கடிமலரின், நல்நறுவாசம், (ரு) மற்றோரானும், எய்தாமே, மன்னும், வறுநிலத்து, வாளாங்கு, (க0) உகுத்ததுபோல், என்னுடைய பெண்மையும், என் நலனும், என் முலையும், மலர் மங்கை, (கரு) மன்னும் மைந்தன், கணபுரத்து, பொன்மலைபோல் நின்றவன் தன், பொன் அகலம், தோயாவேல், (௨0) வாளா, இவைதான், என், எனக்கே பொறையாகி,

அர்.—கல்லென்று சொல்லப்படுகிற (கல்நிறைந்த), காட்டில், ஒரு கொடியானது, பரிமளமுள்ள(தன்) பூவிலுண்டான, நல்ல செவ்வியபரிமளத்தை, (ரு) ஒருவரும், அநுபவியாமற்படி, பொருந்தியிருக்கிற, பாழ் தேசத்தில், வ்யர்த்தமே, (க0) வ்யாபிக்கச்செய்கிறதுபோல், என் ஸ்த்ரீத்வமும், என் குணமும், என்ஸ்தநங்களும், புஷ்பவாஸிநியான பிராட்டி,(கரு)நித்யவாஸம் பண்ணுகிற (திருமார்பையுடைய), யுவாவாய், திருக்கண்ணபுரத்தில், ஸ்வர்ணபர்வதம்போல் (ஸுந்தரனாய்), நின்றவனுடைய, அழகிய திருமார்பிலே சேராவாகில், (௨0) வ்யர்த்தமான இவைகள் எதுக்காக (இருக்கிறது)? என் ஒருத்திக்கே பரமாய்,

(கல்நவிலும்).(ஓர்வல்லி) விலக்ஷணமானவல்லி. (கடிமலர்) மதுவையுடைய மலர்.(நல்நறுவாசம்)நல்லபரிமளம். (மற்றோரானும்) ஓரொருத்தருக்கு. (வறுநிலம்)வெறும்தரை. (மன்னு)மலர்மங்கை மன்னும் மைந்தன். (பொன்அகலம்) கூடவிருந்தே இவளும் "தண்ணீர் தண்ணீர்" என்னும்மார்வு. (தோயாவேல்) அப்படி ஸ்ப்ருஹணீயமான மார்விலே தோயப்பெறுகவின்னுப்பு. விடாய்த்தார் நினைத்த மடுவில் முழுகப்பெறுதாற்போலே.(க) "மெல்லியல்தோள்தோய்ந்தாய்"என்னுமாபோலேஅவனும் இத்தலையில்படி. (என்னிவைதான் வாளா)(௨)"పశ్యలక్ష్మణపుష్పాణినిష్ఫలాని-பஶ்யலக்ஷ்மண புஷ்பாணி நிஷ்பலாநி" நிஷ்பலமானவை எனக்கென்செய்ய? (எனக்கே

அரு.—"தோயாவேல்" என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (விடாய்த்தார்) இத்யாதி.

(௨) ஸ்ரீராமா - கிஷ்கி -

மூ.—முன்னிருந்து மூக்கின்று மூவாமைக் காப்பதோர்,
மன்னு மருந்தறிவீ ரில்லையே,—மால்விடையின் ௩௨
துன்னுபிட ரெருத்துத் தூக்குண்டு, வன்தொடரால்
கன்னியர்கண் மிளிரக்கட்டுண்டு,—மாலைவாய்த் ௩௩
தன்னுடைய நாவொழியா தாடுந் தனிமணியின்,

அ.—முன் இருந்து, மூக்கின்று, மூவாமை, காப்பது, ஓர் மன்னும் மருந்து, (௫) அறிவீரில்லையே, மால்விடையின், துன்னுபிடர், எருத்து, தூக்குண்டு, (௧௦) வன்தொடரால், கன்னியர்கண், மிளிர, கட்டுண்டு, மாலைவாய், (௧௫) தன்னுடையா ஒழியாது, ஆடும், தனிமணியின்,

அ.—முன்னேநின்று, பாதிக்கிறது. (அப்படி) பாதியாமல், காக்கத்தக்க, ஒரு ஸ்த்திரமான ஔஷதத்தை. (௫) (உங்களில்) அறிந்தவர்களில்லையோ? (நாகினிடத்தில்) வ்யாமோஹத்தையுடைய சேக்களின், பெருத்த, பிடரியிலுள்ள, முசுப்பில், தூக்கப்பட்டதாய், (௧௦) வலியசங்கிலியால், பெண்களின் கண்கள், அடுத்துப் பார்க்கும்படி, கட்டப்பட்டதாய், இரவில், (௧௫) தன்னுடைய நாக்கு ஓயாமல், அடித்துக் கொள்ளுகிறதாய், ஶ்லாக்யமான மணிகளினுடைய,

---

பொறையாகி) இருவர் சுமக்கக்கடவ முலையை ஒருவர் சுமக்கப்போமோவென்கை. (முன்னிருந்து) என் கண்கள்காண மூக்கவேணுமோ? என்னைவிட்டுக் கடக்க நின்று மூக்கலாகாதோ? (௧) "వయోస్యాహ్యతివర్తతే - வயோஸ்யாஹ்யதிவர்ததே" என்ற பெருமாளைப்போலே. (௨)* உன்னித்தெழுந்த வென்தடமுலைபட்டபாடு. (மூவாமை) அவனைக் கொடுவந்து தருவாரில்லையே. (மன்னுமருந்து) (௩) సముద్రం రాఘవో రాజా శరణం గన్తుమర్హతి - ஸமுத்ரம் ராகவோ ராஜாசரணம் கந்துமர்ஹதி" என்று கடலைச் சரணம்புக் என்றாற்போலே, "மடலைச் சரணம்புகு" என்பாரில்லையே. இங்கு "ஓராந்தராளிகர் இல்லையோ? என்று கேட்கிறாள்" என்றுபட்டர்.

(மால்விடையின்) நாகின்மேலேபித்தேறின விடையின். (துன்னு) கடியுடைத்தானபிடரியில் கழுத்திலே தூக்குண்டு. (வன்தொடரால்-கட்டுண்டு) தார்மிகர்களுக்கு அவிழ்த்துவிடவொண்ணாதபடி பிணைக்கை. (கன்னியர்) ப்ரணயத்தில் புதியதுண்டறியாதாரும் வெருவி விழிக்கை. (மாலைவாய்) ஊடல் தீரும்காலம். (தனிமணி) வ்யஸநிக்

அரு —(ஆந்தராளிகர்) முமுக்ஷுக்களாய், கடகரென்றபடி. "துன்னு" கடியாய் § செலக்கென்றபடி "பிடர்" பிடரி. தொடர்என்று சங்கிலி.

---

(௧) ஸ்ரீராமா யுத்த-௫-௫. (௨) நாய்ச்-திரு-௧-௫. (௩) ஸ்ரீராமா-யுத்த-௧௯-௩௧.

மூ.—இன்னிசை யோசையும் வந்தென் செவிதனக்கே, ௯௪
கொன்னவிலு மெஃகில் கொடிதாய் நெடிதாகும்,
என்னிதனைக் காக்குமா சொல்லீர்,—இதுவிளைத்த ௯௫
மன்னன் நறுந்துழாய் வாழ்மார்பன், மாமதிகோள்
முன்னம்விடுத்த

அந்.—இன் இசை ஓசையும், வந்து, என் செவிதனக்கே, கொல்நவிலும், எஃகில், (௫) கொடிதாய், நெடிதாகும், இதனை, காக்குமா, என், (௧௦) சொல்லீர், இது விளைத்த, மன்னன், நறும்துழாய், வாழ்மார்பன், (௧௫) மா, மதி, கோள், முன்னம், விடுத்த, (௨௦)

அர்.—ஶ்ராவ்யமான சப்தத்தினொலியும், வந்து, என்காதுகளுக்கு மாத்ரமே, கொல்லுமென்று ப்ரஸித்தமான, சூலத்தைக் காட்டிலும், (௫) க்ரூரமாய், வளராநின்றது, இதை (ப்போக்கி), ரக்ஷிக்கும் ப்ரகாரம், எது? (௪௦) சொல்லுங்கோள். இந்தபாதையை உண்டாக்கின, ஸ்வாமியாய், பரிமளிதமான திருத்துழாய், விளங்காநின்ற திருமார்பை யுடையனாய், (௪௫) (பாதகரில்) பெரியனான், சந்த்ரனுடைய, துக்கத்தை, பூர்வகாலத்தில், போக்கின, (௨௦)

கைக்குத்§தானே தனியென்னுமத்தனை. (இன்னிசையோசை) இனிய பாட்டுக்கேட்டால் படுமோபாதி படுத்தவற்றாயிருக்கை. (செவிதனக்கே) ஹ்ருதயத்திலே வருவதற்குமுன்னே செவியிலே சுட்டுக்கொடு வரும். (நெடிதாகும்) ஓரீட்டிலேமுடித்துவிடாதே சித்ரவதம்பண்ணும். (என்னிதனைக்காக்குமாசொல்லீர்) எவ்வழியாலே ஸ்த்ரீத்வத்தைக்காப்பேன் சொல்லீரென்கிறாள்.

(இதுவிளைத்த) தென்றல், அன்றில், குழல், விடை உள்ளிட்டன இருந்ததே குடியாக என்மேலே படையேறும்படி விளைத்த. கையும் மடலுமாக்கினபடியென்றுமாம். இப்படியாகைக்கு அபிநிவேசத்தை விளைப்பிக்கை. (மன்னன்) இத்தலை அப்படியாகத்தான் உஜ்வலனானபடி. (நறுந்துழாய்) இப்படி படுத்துகைக்கு ப்ரஹ்மாஸ்த்ரம். (வாழ்மார்பன்) தானும் திருத்துழாயோபாதிவாழ நினைக்கிறான். (மாமதி) எங்கள் பகையைவிளைக்கிறானென்கை. நீ அவன் கோள்விடாவிட்டாலும் அவன்தானே எங்களை பாதிக்கவல்லவன்.

அரு.—"மாமதி" எங்கள் பகையான சந்த்ரனை வ்யாதியைப்போக்கிவளர்க்கை. மாமதி என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார், (நீயவன்கோள்) இத்யாதி.

§(பா) வ்யஸநிக்கைக்குத்தானென்னுமத்தனை.

மூ.— முகில்வண்ணன்,—காயாவின் கூசு
சின்னறும் பூந்திகழ் வண்ணன், வண்ணம்போ
லன்னகடலை மலையிட்டணைகட்டி,
மன்னனிராவணனை மாமண்டு வெஞ்சமத்துப்,
பொன்முடிகள் பத்தும் புரளச் சரந்துரந்து, கூஅ

அந்.—முகில் வண்ணன், காயாவின், சின்ன, நறும், பூ, (ரு) திகழ்வண்ணன், வண்ணம்போல்அன்ன, கடலை, மலைஇட்டு, அணைகட்டி (கo) மா, மண்டு, வெம்சமத்து, மன்னன், இராவணனை, (சஎ) பொன்முடிகள்பத்தும், புரள, சரம்துரந்து,

அர்.—மேகத்தின் ஸ்வபாவத்தையுடையனாய் (பரமோதாரனாய்), காயாவினுடைய, சிறியதாய், பரிமளமுள்ள, புஷ்பத்தினுடைய, (ரு) விளங்காநின்ற மேனியை யுடையனாய். (தன்னுடைய) வர்ணம்போன்ற வர்ணத்தையுடைய, ஸமுத்ரத்தை, மலைகளைப்பொகட்டு, ஸேதுகட்டி, (கo) குதிரை (முதலியவை), நிறைந்த, கொடியயுத்தத்தில், ராஜாவாகிய, ராவணனை, (சரு) (அவனுடைய) அழகிய தலைகள் பத்தும், (பூமியில்விழுந்து) புரளும்படி, பாணங்களைவிட்டு,

(முகில்வண்ணன்) ஜலஸ்த்தலவிபாகமில்லாதவன். மதியைரக்ஷித்த உத்தமன்.§(சின்னநறும்பூங்கடலென்னுதல், மேகமென்னுதல்;)சிறுத்தகாயாம்பூவென்கிறது. அனுகலாயிருக்கை.

(வண்ணம்போலன்ன கடலை) சத்ருக்களன்றிக்கே, ஸஜாதீயமான கடல் என்னகுற்றஞ்செய்தது. (மாமண்டு) சதுரங்கபலத்துக்கு முபலக்ஷணம்: (வெம்சமத்து) அவற்றையுடைய யுத்தம். திறந்துகிடந்தவாசலிலே நாய்புகுருமாபோலே புக்குப்போமத்தனையன்றிக்கே, யுத்தத்திலே நேர்நின்று. (பொன்முடிகள்) மணிச்சனிவனென்று எதிரியையும் மதியாதே ஒப்பித்துவந்தபடி. (புரள) தலையோடே உயிரையும் துண்டித்தான். அதாகிறது, உயிரும் தப்பவிரகில்லாதபடி அம்புநுழைந்தசடக்கு. (சரம்துரந்து) வரபலத்

அரு.—முகில்வண்ணன். ப்ரயோஜநாந்தரபரனை சந்த்ரனை ரக்ஷித்தபடி. "அன்னகடல்" ஸாஜாத்யம் நின்ற ஸாம்யத்தாலே. "மா மண்டு" மா-நாலுகால்பதார்த்த மாகையாலே ஆனை குதிரைநிறைந்திருக்கை. மேலே "சரந்துரந்து" என்றதைப்பற்ற அருளிச்செய்கிறார் (திறந்து) இத்யாதி. அன்றியே, மண்டென்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (திறந்துகிடந்த) இத்யாதி. அப்போது மண்டுதல்-எற்றுகை.

§ குண்டலி தம்க்வா சித்கம்.

மூ—.தென்னுலக மேற்றுவித்த சேவகனை,—ஆயிரக்கண்
மன்னவன் வானமும் வானவர்தம் பொன்னுலகும்,
தன்னுடைய தோள்வலியால் கைக்கொண்ட தானவனைப்,
பின்னோ ரரியுருவமாகி யெரிவிழித்துக்,

அந்.—தென்உலகம், ஏற்றுவித்த, சேவகனை, ஆயிரம்கண், மன்னவன், (௫) வானமும், வானவர்தம் பொன்உலகும், தன்னுடைய தோள்வலியால், கைக்கொண்ட, தானவனை, (௧௦) பின், ஓர் அரியுருவமாகி, எரிவிழித்து,

அர்.—தென்திக்கிலுள்ள யமலோகத்தை, அடைவிப்பித்த, சூரனாய்; ஆயிரம்கண்களையுடைய, இந்த்ரனுடைய, (௫) ஸ்வர்க்கலோகத்தையும், (மற்றும்) தேவர்களுடைய அழகியலோகங்களையும், தன்புஜபலத்தினால், வசமாக்கிக்கொண்ட, ஹிரண்யாஸுரனைச், (௧௦) சிறிதுகாலம்கழித்து, அத்விதீயமான நரஸிம்ஹமாய், அனலெறியும்படி விழித்து,

---

தாலே அறுத்த தலைமுளைக்க அவற்றுக்குத்தக்கபடிவிட்ட அம்பின் பெருமை. (தென்னுலகம்) யமலோகம்பாழ்படும்படி முன்பு இங்கே வந்து இவனுக்குப் பணிசெய்தபேர், இப்போது அவனுக்குப் பணிசெய்ய, அவ்வூர் பாழ்திரும்படி குடியேறிற்று.

(ஆயிரக்கண்) தன் விபூதிரக்ஷிக்கவேண்டுங்கண். (தோள்வலியால்) வரபலத்தால்அன்று "என்னது"என்று வரையிட்டுப் போமத்தனை. (பின்) சிலகாலஞ்சென்றபின்பு. (ஓரரி) தன்னாலும் இவ்வடிவுகொள்ளவொண்ணாது. (ஆகி) வரபலத்தாலே மிகைத்தஹிரண்யனை அழிக்கைக்காகச் சேராதநரத்வஸிம்ஹத்வங்களைச்சேர்த்தபடி. (எரிவிழித்து) குளிர்த்தியையுடைத்தானகண்கள் "ஆஶ்ரிதவிரோதி" என்றவாறே நெருப்பையுமிழவற்றாயின. (வெம்சமத்துக்கொல்லாதே) ஓரம்பையிட்டுத் தலையையுருட்டிற்றாகில் முடிசூட்டினதோ

அநு.—"மன்னவன் வானம்" என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (தோள்வலி) இத்யாதி. ஹிரண்யனைப்போல் வரபுஜபலத்தாலே "தன்னது" என்றிருக்கையன்றிக்கே "என்னது" என்று வரையிடும்படி ஸ்வாபாவிகமான ஸ்வர்க்கமென்றபடி; அன்றியே "தன்னுடைய தோள்வலியால்" என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (தோள்வலி) இத்யாதி. (அன்று) அக்காலத்திலே. ஹிரண்யன் தன்னுடைய பலத்தாலே என்னதென்று வரையிட்டிருக்குமென்றபடி.

அ

மூ.—கொன்னவிலும் வெஞ்சமத்துக் கொல்லாதே,—வல்லாளன்
மன்னுமணிக்குஞ்சிபற்றி வரவீர்த்துத், ௧0௧
தன்னுடைய தாள்மேல்கிடாத்தி,—அவனுடைய
பொன்னகலம் வள்ளுகிரால் போழ்ந்துபுகழ் படைத்த, ௧0௨
மின்னிலங்கு மாழிப்படைத் தடக்கைவீரனை,

அந்.—நவிலும்கொல், வெம்சமத்து, கொல்லாதே, வல்லாளன், மணிமன்னு குஞ்சிபற்றி, (ரு) வரஈர்த்து, தன்னுடையதாள்மேல் கிடாத்தி, அவனுடைய பொன்அகலம், வள்உகிரால், போழ்ந்து, (௧0) புகழ்படைத்த, மின் இலங்கும், ஆழிபடை, தடம்கை, வீரனை, (௨0)

அர்.—புகழத்தக்க கொலையையுடைய, கொடியயுத்தத்தில், கொல்லாமல், பலிஷ்டனான அவனுடைய, மணிமயமானகிரீடம் பொருந்தியிருக்கிற குடுமியைப்பிடித்து, (ரு) அருகேவரும்படி இழுத்துத், தன்திருவடிகளின் மேலே போகட்டுக்கொண்டு, அவனது அழகியமார்பைக், கூரியநகங்களினால், கிழித்துக், (௧0) கீர்த்தியையுடையனும், மின்னிக்கொண்டு விளங்குகிற, திருவாழியாகிற ஆயுதத்தை, விசாலமாகிய திருக்கையிலேயுடையனுமான, சூரனாய்; (௧ரு)

டொக்கும். (வல்லாளன்) நரஸிம்ஹமும் பிற்காலிக்கவேண்டும்படியிருக்கை. (மன்னுமணிக்குஞ்சி) “ஹிரண்யாயநமஃ” என்று சொல்லும்படி செலுத்தினகாலம். (மன்னுமணிக்குஞ்சிபற்றிவரவீர்த்து) முடியைப்பற்றினபோதே ப்ராணன்போயிற்று; பின்னை பிணத்தையிழுக்குமோபாதி தன்னுடைய பிராட்டி சாயக்கடவமடியிலே, என்னைப்போலன்றிக்கே, முருட்டுப்பையலையோ மடியிலேற்றுவதென்கிறாள். (பொன்னகலம்) திருவுகிருக்கிரைபோர வளர்ந்தமார்வு. (வள்ளுகிரால்போழ்ந்து புகழ்படைத்த) தமப்பன் பகையாகச் சிறுக்கனுக்கு உதவினானென்னும்புகழ்படைத்த. (மின்னிலங்குமாழி) திருவுகிருக்கிரை போந்ததித்தனை. திருவாழி, தனக்கிரை போராமையாலே சீறி நாக்குநீட்டுகிறபடி. (வீரனை) திருமந்த்ரத்தின்படியே அநுஸந்திக்கிறது.

அரு.—“வல்லாளன் மன்னு” என்று கூட்டியருளிச்செய்கிறார் (ஹிரண்யாய) என்று. காலத்தோடே மன்னியிருக்கை. (வீரனை) (க) [illegible] உக்ரம் வீரம்” என்ற திருமந்த்ரத்தின்படியே என்றபடி.

(க) நரஸிம்ஹமந்த்ரம்.

மூ.—மன்னிவ் வகலிடத்தை மாமுதுநீர் தான்விழுங்கப், கO௩
பின்னுமோ ரேனமாய்ப் புக்கு வளைமருப்பில்,
கொன்னவிலும் கூர்நுதிமேல் வைத்தெடுத்த கூத்தனை, கO௪
மன்னும் வடமலையை மத்தாக மாசுணத்தால்,
மின்னு மிரு சுடரும் விண்ணும் பிறங்கொளியும், கO௫
தன்னினுடனே சுழல மலை திரித்து, ஆங்
கின்னமுதம் வானவரை யூட்டி, அவருடைய கO௬

அந்.—மன்னு இ அகல்இடத்தை, மாமுதுநீர்தான்; விழுங்க, பின்னும், ஓர்ஏனமாய்ப்புக்கு, (௫) வளைமருப்பில், கொல்நவிலும், கூர்நுதிமேல்வைத்து, எடுத்தகூத்தனை, மன்னும், (க0)வடமலையை, மத்தாக, மாசுணத்தால், மின்னும், இருசுடரும், (கரு) விண்ணும், பிறங்குஒளியும், தன்னினுடனேசுழல, மலைதிரித்து, ஆங்கு, (௨0) இன்அமுதம், வானவரைஊட்டி, அவருடைய

அர்.—(ப்ராணிகள்) பொருந்தியிருக்கிற இந்தவிசாலமானபூமியைப், பெரியஸமுத்ரம்தானே, கபளீகரிக்க, மறுபடியும், ஒருவராஹாவதாரமுடையனாய்ப் ப்ரவேசித்து, (௫) வளைந்தகொம்பினுடைய, (சத்ருக்களைக்) கொல்லுமென்று ப்ரஸித்தமான, கூரியநுனியின்மேல் வைத்துக்கொண்டு, உத்தரித்த அழகிய சேஷ்டிதங்களையுடையனாய், ஸ்த்திரப்பட்டிருக்கிற, (க0) வடதிக்கிலுள்ள மந்தரமலையை, மத்தாகச்செய்து, (வாஸுகியாகிற) பாம்பினால் (சுற்றி), ப்ரகாசிக்கிற, இரண்டுதேஜஃபதார்த்தங்களாகிற சந்த்ரஸூர்யர்களும், (கரு) ஆகாசமும், ப்ரகாசிக்கிற (மற்ற) தேஜஸ்ஸுக்களும், தன்னோடு சுழலும்படி, (அந்த) மலையினால்கடைந்து, அந்தஸமுத்ரத்தில்நின்றுமுண்டான, (௨0) இனியஅம்ருதத்தை, தேவர்களுக்குபுஜிப்பித்து, அத்தேவர்களுடைய

(மன்னிவ்வகலிடம்) எல்லாரும் பொருந்தும் பூமி. (தான்விழுங்க) (க) "𑌅𑌦𑍍𑌭𑍍𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀-அத்ப்யஃப்ருதிவீ" என்று உண்டாக்கினதானே விழுங்க. (பின்னும்) ரக்ஷணத்திலே. (ஓரேனம்). அறிவுக்கிட்ட உடம்புக்கு ஆலத்திவழிக்கவேண்டும்படியிருக்கை. (கூர்நுதி) கூரியதான அக்ரம் (𑌅𑌗𑍍𑌰𑌮𑍍).

(மன்னும் வடமலையை) நற்றரிக்கவைத்தபடி. கடையப் பிதிராதமலை. (மின்னுமிருசுடரும் விண்ணும்) மற்றுள்ளதேஜஃபதார்த்த

அந.—"வடமலை" வடக்கேயிருக்கிற மந்தரபர்வதம்.

(க) தைத்தி - ஆநந்த.